• For private circulation only

Book Post


www.tchsportal.co.in

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

விலை : ரூ 60

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• அக்டோபர் 2020 • இதழ் 5




# புத்தக அறிமுகம்



பரிசுத்த வேதாகமம், ஆன்மீகத்திற்கு தேவையானவற்றை மாத்திரமல்ல உலகத்தில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் தேவையான எல்லா காரியங்களையும் உள்ளடக்கியது. மருத்துவம், அறிவியல், கலை, கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் மற்றும் அநேக வாழ்வளிக்கும் வார்த்தைகள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டது வேதாகமம். இவற்றில் ஒரு பிரிவான அறிவியல் கண்டுபிடிப்புகளை இந்த உலக மனிதர்கள் அறிவிப்பதற்கு முன்பு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வேதாகமத்தில் தேவமனிதர்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதி வைத்துள்ளனர். வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்களில் காணப்படும் அறிவியல் உண்மைகள் சிலவற்றின் தொகுப்பே 'வேதாகமத்தில் அறிவியல்' என்ற புத்தகம் ஆகும். 132 பக்கங்களைக் கொண்ட இப்புத்தகத்தில் கர்த்தரின் படைப்பு முதல் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் உள்ள சில சம்பவங்களில் காணப்படும் அறிவியல் உண்மைகள், இன்றைய அறிவியல் கண்டுபிடிப்பாளர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. முதலில் இவர்கள் வேதத்தில் உள்ள அறிவியலை மறுத்தாலும் கடைசியில் அறிஞர்கள் வெளியிடும் கண்டுபிடிப்புகள் வேதம் கூறும் அறிவியல் தத்துவங்களின் அடிப்படையிலேயே வந்து முடிவடைகின்றன. மனிதனின் படைப்பு, மனித உடல் அமைப்பு, மனிதனின் உணவு முறைகள், மனிதனின் ஆயுள் காலம், நோவாவின் பேழை, யாக்கோபின் ஆடுகள், டைனோசர், மற்றும் பல காரியங்களில் வேதம் கூறும் அறிவியல் உண்மைகள் இப்புத்தகத்தில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் பல நூல்களின் ஆதாரங்களோடு கூட தன்னுடைய வாதங்களைத் தொகுத்துள்ளார். வேதாகமத்தில் காணப்படும் அறிவியல் உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரும்படியாக தெரிந்து கொள்ளப்பட்டிருக்கும் தலைப்புகள், வாசிப்போரின் ஆர்வத்தைத் தூண்டுகிறதாக அமைந்துள்ளது. பதில் எட்டாத அநேக கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் இப்புத்தகம் நல்ல விளக்கத்தைக் கொடுக்கின்ற ஒன்றாக அமைந்துள்ளது. எளிய நடையில், வாசிப்போர் எளிதாக புரிந்து கொள்ளும்படியாக இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் ஆசிரியராகிய அருள்திரு. H. ஜாண் சாமுவேல் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் ஊரைச் சேர்ந்தவர். பள்ளி படிப்பை நாசரேத் மர்காஷியஸ் மேல்நிலைப்பள்ளியிலும், கல்லூரி படிப்பை நாசரேத் மர்காஷியஸ் கல்லூரியிலும், முதுகலை படிப்பை பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியிலும் பயின்றுள்ளார். தன்னுடைய இளங்கலை இறையியல் பட்டத்தை பெங்களூரு ஐக்கிய இறையியல் கல்லூரியில் பெற்றவர். தூத்துக்குடி-நாசரேத் திருமண்டலத்தில் குரு அருட்பொழிவு பெற்று, அதே திருமண்டலத்தில் குருவானவராக கிறிஸ்துவின் ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார்




**புத்தகம் கிடைக்கும் இடம்**

அருள்திரு. H. ஜாண் சாமுவேல்
சேகர தலைவர்
பண்டாரஞ்செட்டிவிளை சேகரம்
9488400874

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

**பதிப்பாசிரியர்**
மன்னா செல்வகுமார்

**வடிவமைப்பு**
சுஜித்.S

**ஆசிரியர் குழு**
J ஜான் ஞானராஜ்
Dr.கனகராஜ்
மைக்கேல்
ஆர்.ஆர்.சீனிவாசன்
அருள்திரு.முனைவர் ச.இராஜசேகரன்

**சட்ட ஆலோசகர்**
வழக்கறிஞர். ஐ டி கிங் பால்

**கௌரவ ஆசிரியர்கள்**
டாக்டர். சாமுவேல் வசுந்தரன் சீனிவாசகம்
டாக்டர்.ஜஸ்டின்
Rt.Rev.Dr.L.ஜோசப் மோகன் குமார்
அருள்திரு.லாசரஸ் செல்வநாதன்
அருட்திரு.பேராசிரியர். மா. தேவராஜ்
பேராசிரியர்.மோ.மைக்கேல் பாரடே
அருள்திரு. இரா. சாமுவேல் ஜெயசீலன்
கிங்ஸ்லி மோசஸ் ஜேசுதாஸ்
G. ஆல்வின் ஜேக்கப்
ஜே.பர்னபாஸ்
அருள்திரு. ஜாண் சாமுவேல்
அருள்திரு. இர்வின் ஞானமுத்து

**செய்தி ஆசிரியர்கள்**
டேனியல் மோகன்ராஜ்,சென்னை
ஜான் செல்வின் பாண்டியன், கோவை
ரமேஷ், ஈரோடு
ஜெபர்சன் ராஜசேகர் சு.

**அலுவலக முகவரி**
கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4),வடக்குத்தெரு,
பங்களா சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (திருநெல்வேலி)

மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
தொலைபேசி: +91 9176780001
+91 7538812218

## உள்ளே


- ஒப்பற்ற தலைவராக விளங்கிய சார்ஜென்ட்
- நெல்லை ஆபிரகாம் பண்டிதர்
- திருச்சபையில் தலைமைத்துவம்
- தேவா இரக்கம் இல்லையோ
- அருட்பணி . ஜான்வெஸ்லி வரலாறு
- என்னில் தாக்கத்தை ஏற்படுத்திய தலைமைத்துவ பண்பாளர்கள்
- தஞ்சையில் சீர்திருத்த கிறிஸ்தவம்
- கீர்த்தனை கவிஞர் வே . ஜே.பென்யமீன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு


## மாத இதழுக்காக சந்தா விபரம்

| | |
|---|---|
| மாத சந்தா | ரூ 60/- + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ரூ 600/- + நன்கொடை |
| ஆயுள்சந்தா | ரூ 3000/- + நன்கொடை |

BHIM UPI

**Bank :- Federal Bank**
**Account name :- Tinnevelly Christian Historical Society**
**Account number :- 17480200003684**
**IFSC Code :- FDRL0001748**

நன்கொடை சந்தா செலுத்திய பின்பு செலுத்திய விபரத்தையும் உங்களுடைய முகவரியையும் மறக்காமல் கிழே கொடுக்கப்படுள்ள தொலைபேசி அல்லது மின்னஞ்சல் முகவரி மறக்காமல் தெரிவிக்க அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
தொலைபேசி: 04633 290401, 04633 261101
www.tchsportal.co.in

# ஆசிரியர் சுவடு

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள் பத்திரிக்கையின் வாசகர்கள், எழுத்தாளர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

கிறிஸ்தவ வரலாற்றிற்கென்று ஒரு தனி பத்திரிக்கையின் அவசியத்தை பலர் இன்று உணர்ந்து பத்திரிக்கைக்கு சந்தா கட்டுவதைக்கண்டு வியக்கிறேன். உங்கள் அனைவரின் ஆதரவுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பில் வெளிவரும் பல்வேறு ஆசிரியர்களின் கட்டுரைகள் பலருக்கு பயனுள்ளதாக இருப்பதை நேரிலும், தொலைபேசியிலும் சாட்சியாக தெரிவிப்பது எங்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது.

இந்த மாதம் **கிறிஸ்தவமும் தலைமைத்துவமும்** என்கிற தலைப்பில் பல்வேறு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கிறிஸ்தவமே உலகத்திற்கு நல்ல தலைமைத்துவத்தின் பண்புகளையும் பண்பாடுகளையும் கொடுத்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. அரசியல், சமூகம், சமயம், கல்வி, மருத்துவம், மற்றும் வியாபாரம் போன்ற அனைத்திற்கும் கிறிஸ்தவ அடிப்படை சித்தாந்தங்களும் கிறிஸ்துவின் முன்மாதிரியான வாழ்வும் இன்றும் மதங்கள் கடந்து தலைமைத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது.

நம் தேசத்தின் தந்தை எனப் போற்றப்படும் காந்தி அவர்கள் இயேசுவின் மலைப்பிரசங்கத்தாலும் அகிம்சைக் கொள்கையாலும் கவரப்பட்டு கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று செய்வோம் என்ற நம்பிக்கையுடன் உப்பைப் போல தன்னைக் கரைத்து பிறருக்கும் சுவைக் கொடுக்கும் தலைமைத்துவ வாழ்க்கை வாழ்ந்தார். நம் திருச்சபைக்கும் தேசத்திற்கும் கிறிஸ்துவைப் போன்று தாழ்மை, தூய்மை, தாய்மை போன்ற தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த தலைவர்கள் இருக்கவேண்டும் என்பதே நமது ஆசையும் ஜெபமும்.

நவம்பர் மாத இதழின் தலைப்பு **"கிறிஸ்தவமும் சீர்த்திருத்தமும்"** என்று தெரிவு செய்யப்படுகிறது. சீர்த்திருத்த திருச்சபையின் வரலாற்றை வாசகர்கள் அறிந்துகொள்ளும் விதமாக கட்டுரை ஆசிரியர்கள் கிறிஸ்தவ சீர்த்திருத்த வரலாற்றைப்பற்றிய கட்டுரைகளை எழுதி அக்டோபர் மாதம் 15ம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள் பத்திரிக்கையை உங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறிமுகம் செய்து, இவ்வூழியத்தை தாங்கும்படியாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கர்த்தாராகிய இயேசு கிறிஸ்து நம்மை நல் மேய்ப்பராகவும் அரசராகவும் இருந்து வழிநடத்துவராக.

கிறிஸ்துவுக்குள்

பதிப்பாசிரியர்

## ஒப்பற்ற தலைவராக விளங்கியவர் சார்ஜென்ட்

I.J ஜெபராஜ்

இங்கிலாந்து இளைஞரான எட்வர்ட் சார்ஜென்ட்டை சென்னை கிறிஸ்தவக் கமிட்டியினர் பாளையங்கோட்டைக்கு அனுப்பினர், 07 . 07. 1835 ஆம் நாளில் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். அன்று முதல் அகண்ட திருநெல்வேலியில் ஓர் ஒப்பற்ற அருட்தொண்டராகவும், அரும்பெரும் பேராயராகவும், சபைகளைக் கட்டிய சிற்பியாகவும் 54 ஆண்டுகள் பணிபுரிந்தார். சி. எம். எஸ். மிஷனெரியின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவர் சார்ஜென்ட். அப்பொழுதுதான் நெப்போலிய யுத்தங்கள் நடந்து முடிவுக்கு வந்து கொண்டிருந்தன (1815). ஆனாலும் பிரான்ஸ்க்கும், இங்கிலாந்துக்கும் இடையேயான பகை தீரவில்லை. சார்ஜென்ட்டும் அவரது துணைவியாரும் பாரிஸ் நகரில் இருக்கும்போது, அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிள்ளையின் பெயர் எட்வர்ட். பின்பு சார்ஜென்ட் தம்பதியர் கிழக்கு இந்தியக் கம்பெனியின் பணிக்கு மாற்றப்பட்டு சென்னை நகர் வந்து சேர்ந்தனர். எட்வர்ட் பிறந்த எட்டே மாதங்களுக்குள் தந்தையான சார்ஜென்ட் இறந்துபோனார். எட்வர்ட்டின் தாயார் மகனை இந்தியக் குருவான வில்லியம் சாயர் வசம் விட்டு இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். வில்லியம் சாயர் எட்வர்டை தம் பிள்ளைகளில் ஒன்றாக அன்புடன் நேசித்தார். எட்வர்ட் சார்ஜென்ட் என்றே அழைத்தார்கள். ஆயினும் சார்ஜென்ட் என்ற பெயரே நிலைத்துவிட்டது. சார்ஜென்டிற்கு பள்ளிப்பருவம் வந்தது. இராணுவ சேவையினரின் அநாதைப் பிள்ளைகளுக்கென்று ஒரு சிறந்த பள்ளி சென்னையில் இருந்தது. அதில் சேர்ந்து ஆரம்பக் கல்வியைக் கற்றார். அதன் பின்பு சென்னையில் இருந்த இலக்கியப் பள்ளியில் கற்றுத்தேர்ந்தார். அவர்பயின்றபள்ளிகளிலும், சாயர் இல்லத்திலும் வேத அறிவை நன்கு வளர்த்துக் கொண்டார். அக்காலங்களில் இராணுவத்தில் பணிபுரிந்து இறந்துபோன தகப்பன் இல்லாத பிள்ளைகளுக்கு அரசுப் பணி எளிதில் கிட்டும். அதன்படி எட்வர்ட்டிற்கும் அரசுப்பணி கிடைத்தது. ஆனால் அவர் திருமறையில் அதிக வாஞ்சை கொண்டு திருச்சபையில் சாதாரண ஊழியம் செய்வதையே விரும்பினார். எனவே, 1831 ஆம் ஆண்டு ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் இறையியல் கல்விக்கூடத்தில் பயின்றார். அப்பொழுது அவர் வயது 15. பதினாறாம் வயதில் சி. எம். எஸ். இயக்கத்தில் சேர்ந்தார்.

◇◇◇◇

# பேராயர் இராபர்ட் கால்டுவெல் அவர்களும் இராமநாதபுரம் பகுதியில் நடைபெற்ற S.P.G மிஷன் பணிகளும்

**அருள்திரு பி . ஜான்சன் சாமுவேல் ஜேசுதாஸ்**
சி.எஸ்.ஐ, மதுரை - இராமநாதபுரம் திருமண்டிலம்

சீர்திருத்த திருச்சபையின் மூலமாக உருவான தரங்கம்பாடி மிஷனின் பணிகள் தஞ்சாவூர் பகுதியில் விரிவடைந்தது. அங்கிருந்து இராமநாதபுரம் பகுதிக்கும் நற்செய்தி பரவியது. 1785இல் மிஷனரி சுவார்ட்ஸ் அவர்களால் இராமநாதபுரத்தில் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. பிற்பாடு S.P.C.K மிஷன் பணித்தளமாகவும், அவர்களிடமிருந்து மிஷனும் இப்பகுதியில் திருப்பணியாற்றுகின்ற பொறுப்பினைப் பெற்றார்கள்.

1873-82 மற்றும் 1888-89 ஆண்டுகளில் அருள்திரு . ஜார்ஜ் பில்லிங் (George Billing) அவர்கள் S.P.G. மிஷன் பொறுப்பாளராக முதலில் பாம்பன் என்ற இடத்தை மையமாகக்கொண்டும் பிற்பாடு இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டும் பணியாற்றினார். இந்நிலையில் இப்பகுதியின் பேராயராக அறிவர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் 1877 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திருநிலைப்படுத்தப்பட்டார். அதனைத் தொடர்ந்து தனது பராமரிப்பின் கீழ் கொடுக்கப்பட்ட இப்பகுதியை மே மாதம் 24 ஆம் நாள் சந்திக்க வந்தார். பஞ்சத்தினாலும் தொடர்ந்து ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளத்தினாலும் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த சூழலில் இந்த சந்திப்பு நிகழ்ந்தது.

பேராயர் கால்டுவெல் அவர்கள் இரண்டாவது முறையாக இராமநாதபுரம் பகுதியைச் சந்திக்க 1878 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் நாள் புறப்பட்டார். ஜூலை 30 ஆம் நாள் அருள்திரு . ஜார்ஜ் பில்லிங் அவர்கள் பேராயர் அவர்களை பரமக்குடியில் வரவேற்று அழைத்துச் சென்றார். ஆகஸ்ட் 1 ஆம் நாள் இராமநாதபுரம் வந்தடைந்து, அன்று பிற்பகல் இராமநாதபுரம் ஆலயத்தில் அருளுரை ஆற்றினார். அன்று வார நாளாக இருந்தாலும் 265 பேர் அந்த ஆராதனையில் பங்குகொண்டார்கள். இது முந்தைய ஆண்டில் பேராயர் அவர்கள் வந்தபோது கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையைப் போல இருமடங்காகும்.

ஆகஸ்ட் 7 ஆம் நாள் இராமநாதபுரத்தில் திருச்சபை மாநாடு (Church Congress) நடைபெற்றது. பேராயர் கால்டுவெல் தலைமையேற்று நடத்தின இம்மாநாட்டில் இரண்டு முக்கிய காரியங்கள் ஆலோசிக்கப்பட்டன.

1. தன்னார்வ நற்செய்திப் பணி (Voluntary Evangelization)
2. சய சார்பு (Self Support)

அதனைத் தொடர்ந்து வரவணி, தேவிபட்டினம், ராஜசிங்கமங்களம் வட்டங்களைச் சந்திக்கச் சென்றார். அங்கிருந்து இராமநாதபுரம் வழியாக பாம்பன் வட்டத்தைபார்வையிடச் சென்றார். அங்கிருந்து இராமநாதபுரம் திரும்ப வந்து இராமநாதபுரம் கிராமப் பகுதிகளில் வெள்ளத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வலையர் இன மக்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட புதுக்கோயில் புதிய ஆலயம் கட்டப்பட்டபடியால் இப்பெயர் ஏற்பட்டது. அத்தியட்சபுரம் பேராயர் கால்டுவெல் அவர்களின் நற்பணியை நினைவுகூற இப்பெயர் ஏற்பட்டது. (இவ்வூர் வேதக்காரன்வலசை என்றும் அழைக்கப்படுகிறது) குடியேற்றங்களைச் சந்திக்க சென்றார் . உப்பளங்களில் பணியாற்றின ஆளவர் இனத்தவரையும் சந்தித்தார். கீழக்கரையில் கட்டி முடிக்கப்படும் தருவாயில் இருந்த புதிய ஆலயத்தையும் மேலக்கிடாரம் என்ற ஊரில் கட்டிமுடிக்கப்பட்ட ஆலயத்தையும் பார்வையிட்டார். இவ்விதமாக 37 நாட்கள் தொடர்ச்சியாக பணியாற்றிய பின் தனது சந்திப்பை நிறைவுசெய்து மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் திரும்பினார்.

இராமநாதபுரம் மிஷன் பகுதிகளுக்கு பேராயர் கால்டுவெல் அவர்கள் மூன்றாவது முறையாக 1880 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் முதல் பெப்ரவரி மாதம் 26 ஆம் நாள் வரை வந்து அனைத்து மக்களையும் சந்தித்தார். பல ஆண்டுகளுக்குப் பின் இந்த ஆண்டில்தான் விவசாயிகள் நல்ல விளைச்சலைக் கண்டார்கள். பல்வேறு இடங்களில் கிறிஸ்தவர்களுக்கு துன்புறுத்தலும் இக்காலத்தில் ஏற்பட்டது.

இராமநாதபுரத்திலும், அதற்கு 5 மைல் தொலைவிலிருந்த புதுக்கோயில் என்ற இடத்திலும் திடப்படுத்துதல் ஆராதனை நடைபெற்றது. பேராயர் கால்டுவெல் அவர்களும், அருள்திரு, ஜார்ஜ் பில்லிங் அவர்களும் புதுக்கோயில் கிராமத்தில் தங்கியிருந்த கூடாரத்தின் அருகிலிருந்த புளியமரத்தினடியில் திடப்படுத்துதல் பெறுகின்றவர்களைச் சந்தித்தனர். திடப்படுத்தல் பெறுகின்றவர்கள் இந்த புனித செயல்பாட்டின் மூலம் கிடைக்கப்போகிற ஆசீர்வாதங்களைப் பூரணமாகப் பெறலாம் என்ற நம்பிக்கையோடிருந்தனர்.

நான்காவது முறையாக பேராயர் கால்டுவெல் அவர்கள் 1885 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இராமநாதபுரம் மிஷன்பகுதிகளைச் சந்திக்க வந்தார். இங்கிலாந்திலுள்ள பெயர் சொல்லவிரும்பாத ஒரு பெருமாட்டி கொடுத்த காணிக்கையினால் பரமக்குடியில் கட்டப்பட்ட **'கடவுளின் பொறுமையின் ஆலயத்தில்'** ஆராதனை நடத்தினார். பரமக்குடி நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு ஜூலை மாதம் 17 ஆம் நாள் இராமநாதபுரம் வருகை தந்தபோது விளக்குகளைக் கையிலேந்தி மக்கள் வரவேற்று பவனியாக அழைத்துச் சென்றனர். இம்மரியாதை செய்யும் நிகழ்ச்சியில் சேதுபதி மன்னரின் அரண்மனை யானையும் பங்குகொண்டது. ஜூலை 11 ஆம் நாள் இராமநாதபுரம் ஆலயத்தில் திடப்படுத்துதல் ஆராதனை நடைபெற்றது. 140 பேர் திடப்படுத்துதலில் பங்கு பெற்றனர். ஜூலை 20 ஆம் நாள் விடுதியில் தங்கிப் படிக்கிற மாணவர்களைச் அவர்களைப் பயிற்றுவிக்கிறவர்களை சந்தித்து அவர்களை சோதனைச் செய்தார். ஆசிரிய - ஆசிரியைகளையும் சந்தித்து பேசினார்.

அதே த

தினத்தில் இராமநாதபுரம் கல்லறைத் தோட்டத்தையும் மங்கலப்படைப்பு செய்தார். ஜூலை 21 ஆம் நாள், மிஷனரி சுவார்ட்ஸ் மற்றும் தஞ்சாவூரின் ஆட்சியராக இருந்த திரு . சல்லிவன் ஆகியோரால் 1784 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இராமநாதபுரம் உயர்நிலைப்பள்ளியின் நூற்றாண்டு விழாவில் பங்குகொண்டார்.

ஜூலை 22 ஆம் நாள் சிங்காரத்தோப்பு மிஷன் வளாகத்தைப் பார்வையிட்டார், குறிப்பாக அச்சகத்தையும், பெண்கள் பள்ளியையும் பார்வையிட்டார். எஞ்சிய சில நாட்கள் முக்கிய திருச்சபை உறுப்பினர்களையும், ஏஜெண்டுகள் என்று அழைக்கப்பட்ட மிஷன் பணியாளர்களையும் சந்தித்தார். 1880 ஆம் ஆண்டில் இருந்ததைவிட மிஷன் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு ஆண்டவரைத் துதித்தார்.

பேராயர் கால்டுவெல் அவர்கள் ஐந்தாவது முறையாக இராமநாதபுரம் பகுதி மிஷன் பணிகளைப் பார்வையிட 1889 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வந்தார். இந்தப் பயணத்தில் திருச்சி பகுதியின் திருப்பணியாற்றிய அவரது மருமகன் அருள்திரு J.C. வையாட் அவர்களும் உடன் வந்தார்கள். மதுரையிலிருந்து பரமக்குடிக்கு பயணித்த போது பேராயர் பயணித்த வண்டியின் சக்கரத்தில் ஏற்பட்ட பிரச்சனையினால் பயணம் தடைபட்டது. அருள்திரு. வையாட் தனது வண்டியை பேராயர் பயணிக்கக் கொடுத்து தான் பொருட்கள் கொண்டு செல்கிற வண்டியில் பயணம் செய்தார். அருள்திரு. ஆர்தர் ஹீபர் தாமஸ் அவர்கள் பரமக்குடியில் பேராயர் அவர்களை வரவேற்றார். அங்குள்ள **"கடவுளின் பொறுமையின் ஆலயத்தில்"** காலை 7.30 மணிக்கு திருவிருந்து வழிபாடு நடைபெற்றது. இராமநாதபுரத்தில் பள்ளி மாணவர்கள் மிஷன் வளாக நுழைவு வாயிலில் வரவேற்று வளைவு ஒன்றை அமைத்திருந்தனர் . மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு பேராயர் அவர்கள் பயணம்செய்த வண்டி இராமநாதபுரம் மிஷன் வளாகத்தை அடைந்தபோது பள்ளி மாணவர்கள் வரிசையாக நின்று வரவேற்றனர்.

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இயலாமல், வெளியூரில் இருந்தபடியால் தந்தி மூலமாக தனது வருத்தத்தையும் பேராயர் அவர்களின் ஆசீர்வாதத்தையும் வேண்டினார். அதுமட்டுமல்லாது தனது சொகுசு அலங்கார வாகனத்தையும், அரச இசைக்குழுவையும் இவ்வரவேற்புக்குப் பயன்படுத்த ஆணையிட்டார். அதன்படி மாலை 5 மணிக்கு இரட்டை குதிரைகள் பூட்டப்பட்ட அலங்கார வாகனமும் ஆங்கில இசைக்குழுவும் பேராயர் கால்டுவெல் தங்கியிருந்த மிஷனெரி பங்களா முன்வந்து நின்றது. அரண்மனை யானை முன்செல்ல ஏராளமான மக்கள் பேராயர் அவர்களை வரவேற்று ஆலயத்திற்கு ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். இந்த ஊர்வலம் ஆலயத்திற்குச் சென்றடைய ஒரு மணிநேரத்திற்கும் மேலானது ஆங்கில, தமிழ் இசை குழுக்கள் தனித்தனியே இசை இசைத்தார்கள் . ஆலயமணி ஒலிக்கப்பட்டது. குண்டுகள் வெடிக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் கரவொலி எழுப்பி உற்சாகப்படுத்தினர். எல்லாவற்றுக்கும் மேலாக யானை எக்காள ஓசை எழுப்பியது.

ஆகஸ்ட் மாதம் 8 ஆம் நாள் பேராயர் கால்டுவெல் அவர்கள் இராமநாதபுரம் மிஷன் உயர்நிலைப்பள்ளியைப் பார்வையிட்டார். 15 ஆண்டுகளாக தலைமையாசிரியராகப் பணிசெய்துவந்த திரு. தீட்டி ( Shutie ) அவர்களின் அறிக்கையை வாசிக்கக் கேட்டு மாணவர்களுக்கு பரிசு வழங்கினார். ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை திடப்படுத்துதல் ஆராதனை நடத்தினார். 92 ஆண்கள் 93 பெண்கள் உள்பட 185 பேர் திடப்படுத்துதல் பெற்றார்கள். ஆலயத்தின் உள் 699 பேர் மட்டுமே அமரமுடிந்தது. பல்வேறு தூரமான இடங்களிலிருந்து வந்தவர்கள் ஆலயத்திற்கு வெளியே நின்றுகொண்டார்கள். அன்று காலை 7 மணிக்கு நடைபெற்ற திருவிருந்து ஆராதனையில் 198 பேர் பங்கு பெற்றனர்.

பேராயர் கால்டுவெல் அவர்களின் கடைசி பயணம் இராமநாதபுரம் பகுதியில் நடைபெற்ற போது அவருக்கு 67 வயது. பேராயர் அவர்களுக்கும் அவரைப் பார்க்க வேண்டும் என்று காத்திருந்த மக்களுக்கும் இது இனிய உற்சாகம் தருகிற சந்திப்பாக அமைந்தது.

இன்றைக்கும் இராமநாதபுரம் பகுதியில் பயணம் செய்வது கடினமான அனுபவமாகும் . ஆனால் அடிப்படை வசதிகளற்ற சாலை வசதிகள் குறைவான கடினமான சூழ்நிலையில் மக்கள் மேல் கரிசனைகொண்டு பேராயர் கால்டுவெல் அவர்கள் மேற்கொண்ட பயணங்கள் மற்றும் சந்திப்புகள் இன்றைய இறைப் பணியாளர்களுக்கு முன் மாதிரியாக அமைந்திருக்கிறது. நாமும் பேராயர் கால்டுவெல் அவர்களின் அடிச்சுவட்டில் நடந்து ஆண்டவருக்கு மாட்சிமை உண்டாக்குவோம்.

# ஒருமைப்பாடு

அருள்திரு லாசரஸ் செல்வநாதன்,
வேலூர் காட்பாடி

அழியப்போகும் ஆலயத்திற்கே இயேசுவின் கண்ணீர்
ஆலயங்கள் பலவிருந்தும் வழிபாட்டின்றி நம் கண்ணீர்
ஆற்றிதேற்ற நீங்களே ஆலயங்கள் என்றார்.
ஆலயத்தைக் கெடுத்தால், தேவன் கொரோனாவை கொல்வார்
ஆன்மாவை குறைக்காத கொரோனா ஆயுளை குறைப்பதேன்.
ஆயுளை நீடிப்பது அவரவர் பாடுகளே?
ஆயுள் நீடிக்க பெற்றோரை மதித்தலோ (எபே.6:2) விலகி வாழ்தல்
ஆலயத்தில் ஜெபமில்லை,
இல்லத்திலுமில்லை எனின்
உள்ளத்திலே ஜெபிக்க ஒரு தேவையுமில்லை.
உம்முயிர்க்காய் கெத்சமனேயில் ஊக்கமாய் ஜெபித்தீர்!
உலகுக்காக உலகே ஜெபிக்கும் இன்று
உண்மையில் தனக்காக ஜெபிக்கும் மனம் இல்லை
ஒருவர்க்கும் இல்லை. உலக குடும்பத்திற்கே உருகி
ஓர் குலம், ஓரினம், ஒரு சாதி, ஒரு சமயம்,
ஒருமைப்பாட்டுணர்வு, உலகநலம், ஒரே நாடு
ஒரே ஜெபம், என்றுணர்த்திய கொரோனாவுக்கு
ஒரே முறை நன்றி!

# நெல்லை ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு எழுதப்பட்ட சிறப்பு பதிவு



**புகைப்பட கலைஞர். ஆர்.ஆர்.சீனிவாசன்**

இந்திய மக்கள் பெரும்பாலும் தங்கள் நாட்டிற்கு பெருமை சேர்த்தவர்களுக்கு உரிய சிறப்பினை செய்யாது சிறுமைப்படுத்தி விடுகின்றனர் என்று சாமர்செட் பிளைன் என்பவர் தனது Southern India, It is history of People, Commerce and Industrial resources என்ற புத்தகத்தில் ஆபிரகாம் பண்டிதர் குறித்து எழுதுகிற பொழுது குறிப்பிடுகிற அளவுக்கு சிறப்பு வாய்ந்தவராக வாழ்ந்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

ஆபிரகாம் பண்டிதர் அவர்கள், தென்காசி மாவட்டத்தில் உள்ள சாம்பவர் வடகரை பகுதியில் முத்துசாமி நாடார் மற்றும் அன்னம்மாள் 1859-ம் ஆண்டு ஆகஸ்டு 24-ம் நாள் மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியைப் பன்றிகுளம் எனும் கிராமத்தில் படித்தார். 1874-ம் ஆண்டு ஆசிரியர் பயிற்சி மேற்கொள்ள திண்டுக்கல் சென்றது அவரது வாழ்வில் முக்கியமான மாற்றங்களை கொண்டுவந்தது.

## சித்த மருத்துவத்தில் ஈடுபாடு

சடையாண்டி பண்டிதரிடம் பிடில் வாசிக்க கற்றுக் கொண்டவர், பழனிக்கு செல்லும் சாதுக்கள், முனிவர்கள், பரதேசிகளிடம் உரையாடுவதன் வழியாக சித்த மருத்துவக் குறிப்புகளை அறியத் துவங்கினார். மருத்துவத்தில் உள்ள ஈடுபாடு காரணமாக ஆனைமலைப்பட்டியில் இருந்த பொன்னப்ப நாடாரை சந்தித்து மேலும் வைத்தியம் படிக்கத் துவங்கினார். பொன்னப்ப நாடார் இவரை சுருளி மலைக்கு அழைத்துச் சென்று கருணானந்த முனிவரை சந்திக்கச் செய்தார். கருணானந்த முனிவர் இவருக்கு மருந்துகள் தயாரிப்பதையும், இசை இலக்கணங்களையும் கற்றுக் கொடுத்தார்.

பண்டிதர் தான் தயாரிக்கும் மருந்துகளுக்கு 'கருணானந்த சஞ்சீவி மருந்துகள்' என்று பெயரிட்டு நன்றிக்கடன் செலுத்தினார். 1882-ம் ஆண்டு பொன்னம்மாள் எனும் ஆசிரியரை திருமணம் செய்து கொண்டார். 1890-க்குப் பின் மனைவியும் இவரும் ஆசிரியர் வேலையை துறந்துவிட்டு முழுநேரமாக மருந்து தயாரித்து விற்கத் துவங்கினர்.

புதிய தாவரங்களையும், மூலிகைகளையும் வளர்க்க தனி தோட்டத்தை உருவாக்கினர். 1899-ம் ஆண்டு இந்தியாவின் பல இடங்களிலும் குறிப்பாக கோயம்புத்தூர், மைசூர் போன்ற பகுதிகளில் தொற்று நோய் பரவியபோது பண்டிதரின் மருந்துகள்தான் நோய்க்கு மருந்தாகப் பயன்பட்டன. இதனால் அவருடைய புகழ் இலங்கை, பர்மா, சிங்கப்பூர், தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும் பரவியது. சளி, இருமல், வயிற்றுப் போக்கு போன்றவற்றிற்கு பயன்படும் சஞ்சீவி செந்தூரம் போன்ற மருந்துகள் அவருடைய பெருமையை காட்டும் கண்டுபிடிப்புகள் ஆகும்.

இந்திய மருத்துவத்துறை கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்த டாக்டர் தியாகராஜன், "தற்காலத்தில் இருப்பது போன்ற சிறந்த மருத்துவமனைகள் இல்லாத அக்காலத்திலேயே பண்டிதர் அவர்கள் பெருமளவில் மருந்துகளை தயாரித்து தமிழ்நாடு மட்டுமின்றி கடல் கடந்து தமிழர்கள் வாழுகின்ற இலங்கை முதலான பல அயல்நாடுகளில் தமிழ் மருந்துகளை வழங்கி வந்தார்" என்று குறிப்பிட்டிருப்பார்.

## தமிழிசை ஆய்வுகள்

தமிழ் அறிஞரான ஆபிரகாம் பண்டிதர் சங்கீதம் கற்கும்போது பாடல்கள் தாய்மொழியில் இல்லாதது குறித்து கவலையுற்றார். பாடல்கள் எளிதில் புரியும் விதத்தில் இருக்க வேண்டும் என்று நினைத்தார். அதுமட்டுமின்றி கலை என்பது மனமகிழ்ச்சிக்கு மட்டுமல்ல, வாழ்க்கையின் உயர்ந்த நிலைக்கு பயன்பட வேண்டும் என்று நினைத்தார். தெரியாத மொழியில் பாடல்கள் பாடுவதால் முழு பயனும் இல்லாமல் போய் விடுகிறது என்பதை உணர்ந்து, பாடும் போது பொருள் உணர்ந்து அர்த்த பாவத்துடன் பாட வேண்டும் என்று நினைத்து தமிழ் மொழியில் எளிய இனிய நடையில் எழுத ஆரம்பித்தார். அத்தோடு நிற்காமல் இசை ஆய்விலும் ஈடுபட்டார்.

ஒரு ஸ்தாயில் 22 சுருதிகள் என்று வட மொழி வல்லுநர்களின் கருத்தையே பிற்காலத்தில் திராவிட அறிஞர்களும் கூறிவந்தனர். ஆனால் ஆதித் தமிழ் மக்கள் 24 சுருதிகளை அறிந்திருந்தனர் என்பதைக் கண்டறிந்து உலகுக்கு அறிவித்தார் ஆபிரகாம் பண்டிதர். இது தமிழ் மொழிக்கும், தமிழர் வரலாற்றுக்கும் பண்டிதர் செய்த மாபெரும் பணியாகும்.

தன் ஆய்வுகளை பரோடாவில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் முன்வைத்து, தனது மகள்களான மரகதவல்லி, கனகவல்லி ஆகியோரை 24 சுருதிகளையும் பாடி காட்ட செய்ததுடன், வீணையில் வாசித்துக் காட்டவும் செய்தார்.

## பண்டிதர் நடத்திய இசை மாநாடுகள்

மருத்துவத் துறையில் தான் சேர்த்த பெரும் செல்வத்தை தமிழிசைப் பணிக்கு செலவு செய்தார். ஏழு இசை மாநாடுகளை சிறப்பாக நடத்தினார்.

முதல் இசை மாநாடு 27.5.1912
2வது இசைமாநாடு 21.8.1912
3வது இசைமாநாடு 19.4.1913
4வது இசை மாநாடு 9.8.1913
5வது இசை மாநாடு 18.4.1914
6வது இசை மாநாடு 24.10.1914

7வது இசை மாநாடு 19.08.1916

## தஞ்சையில் நடைபெற்ற முதல் இசை மாநாடு

இசை மாநாடுகளிலும் இசை ஆய்வுகளில் சுருதி பற்றியே பெரும்பான்மையாக ஆய்வு செய்ய வைத்தார். தனது 15 ஆண்டுகால ஆய்வுகளைத் தொகுத்து 1365 பக்கம் கொண்ட **'கருணாமிர்த சாகரம்'** எனும் புத்தகமாக கொண்டுவந்தார்.

## நாகசுரக்காரர்கள் பற்றிய ஆய்வு

நாகசுரம் என்ற தமிழகத்தின் இசைக் கருவியை நாதஸ்வரம் என்று இன்று பலர் அழைக்கின்றனர். இது நாதஸ்வரம் அல்ல நாகசுரமே. நாக வடிவில் இருப்பதாலும், ஏழு நாகங்களின் ஒலியமைப்பின் படி அமைந்த கருவியென்றும், பழங்காலத்தில் இசைவாணர்களை நாகரி என்றும் அழைப்பதாலும் பண்டிதர் 'நாகசுரக்காரர்' என்றே அழைக்கிறார்.

நாகசுரக் கலையால் தமிழருடைய பண்பாடு வளர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல என்று சொன்ன பண்டிதர், "நாகசுரக்காரர்கள் சிறந்த இசைவாணர்களாக திகழ்ந்தனர், இக்கலையை பலருக்கு கற்றுக்கொடுத்தனர். கலையைக் கற்றவர்கள் தாம் அறிந்தவற்றை நூல்கள் வாயிலாக எழுதி வைக்கவில்லை. எழுதி வைத்திருந்தார்கள் என்றால், மிக அரிய கலைச் செல்வங்களை தமிழ் உலகம் நன்கு அறிந்திருக்கும்" என்றும் எழுதியிருக்கிறார்.

தென்னிந்தியாவின் சங்கீத பரம்பரையினர் இசைத்தமிழில் சில நுட்பமான அம்சங்களைக் கொண்ட நூல்களின் கருத்தை அறிந்து கொள்ள இயலாமல் போனவர்களாக இருந்தாலும், ஆதி பண்கள் பலவும் அவர்களாலேயே பேணப்பட்டு வருகிறது என்றும் கூறுகிறார். வீணை வாசிப்பதிலும், வாய் பாட்டிலும் தேர்ந்த வித்வான்களுக்குக் கூட சொல்லிக் கொடுக்கக் கூடியவர்களாக நாகசுரக்காரர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்.

தென்னிந்தியாவில் சங்கீதத்தில் தேர்ந்த வித்வான்களின் பெயர்களும், அவர்களைப் பற்றிய முக்கியக் குறிப்புகளும் என்ற தலைப்பில் இசைவாணர்கள் பலரைப் பற்றி 'கருணாமிர்த சாகரம்' புத்தகத்தின் முதல் பாகத்தில் குறிப்பிடுகிறார் அதில் பல நாகசுரக்காரர்கள் பற்றிய குறிப்பையும் எழுதியிருக்கிறார்.

## பண்டைத் தமிழ் இலக்கியங்களும் தமிழிசையும்

பண்டைய தமிழ் இலக்கியங்களே தமிழிசையின் முதல் ஆதாரங்கள் என்று விரிவாக நிரூபித்தவர் பண்டிதர். நான்கு வகை நிலங்களாக இயற்கையைப் பிரித்தது தமிழ் மரபு. நான்கிற்கும் கருப்பொருள், உரிப்பொருள் வகுத்தது. இது நமது கலை, இலக்கியங்களுக்கெல்லாம் பொதுவான இலக்கண அடிப்படையாகும். நான்கு நிலத்திற்கும் தனியாக நான்கு பெரும் பண்கள் கூறப்பட்டுள்ளன. நான்கு பெரும் பண்களும், நான்கு சிறு பண்களும் வகுத்துக் கூறப்பட்டுள்ளன.

நான்கு நிலங்களும், பாலையாகத் திரிபு கொள்ளும் போது அதற்கும் பெரும் பண்கள் மற்றும் சிறு பண்கள் வகுக்கப்பட்டுள்ளது. பண்கள் தான் இராகங்களாக காலப்போக்கில் வளர்ச்சி அடைந்தன. பண் என்பது பாடலின் இசை வடிவம். அதை மெட்டு என்றும் கூறலாம். நான்கு நிலத்திற்கும் உரிய பெரும் பண்களை பாலை என்கிறோம். நமது பழந்தமிழ் இலக்கியங்களில் ஏழ்பெரும் பாலை என்பது அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. சிலப்பதிகாரம் கூறும் வட்டப் பாலை முறையில் ஏழ் பெரும் பாலைகளை அமைத்துக் கூறியவர் பண்டிதரே.

ஏழ்பெரும் பாலைகளாவன

1. செம்பாலை
2. அரும்பாலை
3. கோடிப்பாலை
4. மேற்செம்பாலை
5. படுமலைப்பாலை
6. செவ்வழிப்பாலை
7. விரிம்பாலை

இந்த ஏழு பண்களையும் வட்டப் பாலை முறையில் அமைத்துக் காட்டியவர் பண்டிதரே. வட்டப் பாலை முறையில் ராகங்கள் எப்படி அமைகின்றன என்று கண்டடைந்து சொன்னதே பண்டிதருடைய முக்கியமான சாதனை என்று தமிழிசை அறிஞர் ந.மம்முது ஒரு நேர்காணலில் கூறினார்.

## இசைக் கருவூலமாய் சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தை அதன் உரையாசிரியர்களான அரும்பதனார், அடியார்க்கு நல்லார் ஆகியோர் உரை வழியாகக் கற்று, உலகம் முழுவதற்கும் சிலப்பதிகாரம் காட்டும் செந்தமிழ் இலக்கணம் முழுமையானதும் முதன்மையானதுமாக மாறுகிறது என்பதை பண்டிதர் விளக்கினார். மேலும் கால அளவில் சிலப்பதிகாரத்திற்கு பின்வந்த 'சங்கீத ரத்னாகரம்' போன்ற நூல்கள் விளக்காதவற்றை எல்லாம் சிலப்பதிகாரம் விளக்கியுள்ளது என்பதை நிறுவினார். தொன்மையான இசை மரபுகளை அருளிய இசைக் கருவூலம் சிலப்பதிகாரம் என்பதையும் நிரூபித்துக் காட்டினார்.

ஆசிரியராக, சித்த மருத்துவராக, கவிஞராக, தமிழிசை ஆய்வாளராக தொண்டாற்றிய ஆபிரகாம் பண்டிதர் 1918-ம் ஆண்டு ஆகஸ்ட் 31-ம் நாள் இயற்கை எய்தினார்.

**தமிழிசை உலகின் நீண்ட இருளைக் கிழித்து வெளிவந்த முழுமதி ஆபிரகாம் பண்டிதர்.**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇



தொடருங்கள்
'சுவிஷேடகனுடைய
பாதங்கள் எவ்வளவு
அழகானவை' என
அறிய நன்றியுடன்
வாழ்த்துக்கள்

-Tamilarasan Mangalraj

# திருச்சபையில் தலைமைத்துவம் – ஒரு வேகமான வரலாற்றுப் பார்வையும் சவாலும்

சாம்
ஒரிசா

வேதாகம வரலாறு வீழ்ந்து போன உலகில் ஆண்டவருக்காய் வாழ்ந்த தேவ மனிதர்களின் வரலாறு! உலக மீட்பிற்கான தேவ திட்டத்தை நிறைவேற்றுவதில் சாதாரண மனிதர்களின் வீர முயற்சிகளின் வரலாறு! அதைத் தொடரும் அருட்பணியின் வரலாறு முன்னோடி மிஷனெரிகளின் வரலாறு! இதன் விளைவாய் மலர்ந்த திருச்சபைகளின் வரலாறு அதின் மூப்பர்கள் / மேய்ப்பர்களின் வரலாறு!

ஆம், சபை வரலாறு இப்படிப் பலவிதமான தலைவர்களின் வரலாறே!

தூய ஆவியால் நிறைந்து எருசலேமின் பெருங்கூட்டத்திற்கு சவால் விட்ட பேதுரு, அமைதியாய் அவருக்குத் தோள் கொடுத்த பின் வெகுகாலம் வாழ்ந்து பரலோக தரிசனம் கண்ட யோவான், முதல் இரத்தச்சாட்சியான ஸ்தேவான், சமாரியாவைக் கலக்கிய பின் ஆப்பிரிக்காவிற்கு நற்செய்தியை அனுப்பி, தன் நான்கு குமாரத்திகளையும் தீர்க்கதரிசிகளாய் உருவாக்கிவிட்ட பிலிப்பு, பவுலுக்கு ஒரு அடையாளம் கொடுத்து - அந்தியோகியாத் திருச்சபையை ஒரு மிஷனெரிச் சபையாய் உருவாக்கின பர்னபா, புறஜாதியார் மத்தியில் சபைகளை நாட்டி வளர்ப்பதில் தன்னை ஊற்றிவிட்ட பவுல், அவரால் உருவாக்கப்பட்டு பின்னாளில் சபைத்தலைவர்களாய் ஜொலித்த தீத்து மற்றும் தீமோத்தேயு, அவருக்கு உறுதுணையாயிருந்த பல சகோதர சகோதரிகள் (ரோமர் 16), இந்தியாவிற்கு இயேசுவைக் கொண்டுவந்த தோமா இப்படிப் பலர்!

சீடரைத் தெரிந்தெடுத்து, அவர்களைப் பயிற்றுவித்து, அவர்களுக்கு வல்லமையைத் தரிப்பித்து, பொறுப்பளித்ததின் மூலம்(மத்தேயு 10 & 28)தம் பெரும்பணிக்கான தலைமைத்துவத் தேவையை வெளிப்படுத்துகிறார் நம் ஆண்டவராகிய இயேசு. சீடரின் கால்களைக் கழுவினதின் மூலமும், சிலுவையில் மரித்ததின் மூலமும் (யோவான் 13 & 10) கிறிஸ்தவத் தலைவனின் அடிப்படைக் குணாதிசயங்களைஅவர் நிர்ணயம் செய்கிறார்.

எபேசியர் 4:11-13 சபைப்பணியின் ஐந்து வகைத் தலைமைப்பொறுப்புகள்மற்றும்வரங்களைக் குறிப்பிடுகிறது (1 கொரிந்தியர் 12:8-11, 28) - அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள். போதக நிருபங்களில் (தீத்து & 1 தீமோத்தேயு) கண்காணிகள் மற்றும் உதவிக்காரரையும், தீத்து, அப்போஸ்தலர் மற்றும் பேதுருவில் மூப்பர்கள், மேய்ப்பர்கள் எனும் பொதுவான சபைத் தலைமைத்துவ வார்த்தைகளையும் பார்க்கிறோம். வெளிப்படுத்தலில் (1-3) சபைகளின் **"தூதன்"** என்னும் தலைமைத்துவ சொல் பயன்படுத்தப்படுகிறது. இவர்களை ஆண்டவர் தம் திருக்கரங்களில் ஏந்தியுள்ளார் என்பது எவ்வளவு ஆனந்தம்! ஆயினும், சபைகளின் நிறைகுறைகளின் பட்டியல் என்பது தலைவர்களின் தர நிர்ணயமே என்பதும் தெளிவாகிறது! சபைகளுக்கான மனம் திரும்புதலின் அழைப்பு முதலில் வருவது அதின் தலைவர்களுக்கே!

## எப்படிப்பட்டத் தலைவர்களை நாம் சபை வரலாற்றில் காண்கிறோம் ?

வேதாகமக் காலத்திற்குப்பின் கடும் உபத்திரவத்தின் மத்தியில் தம் ஊழியத்தை நிறைவேற்றின "சபைப் பிதாக்கள்" என்று அழைக்கப்படும் போலிகார்ப், அகஸ்டீன், ஆரிஜென், ஜஸ்டீன் மார்ட்டியர்.

கான்ஸ்டன்டைன் காலப் பெரும் சபை வளர்ச்சியின் மத்தியில் மாறுபட்டப் போதனைகளிலிருந்தும் பிளவிலிருந்தும் சபையைக் காப்பதற்கு தம் வாழ்வைப் பணயம் வைத்த பல பெரியவர்கள், நாடு கடத்தப்பட்டவர்கள் - இவைகளின் மத்தியிலும் சுவிசேஷ வேட்கைத் தணியாமல் கடல் கடந்து நற்செய்திப் பணியாற்றிய நெஸ்டோரியன் போன்றவர்கள்.

சூழ்நிலையைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் குவித்துக்கொண்ட ரோம் நகரப் பேராயர்கள் அதாவது, மேலை நாட்டுப் போப்புகள்! இவர்களிடமிருந்து பின்னாட்களில் கீழைநாட்டுச் சபைகளைப் பிரித்துக்கொண்ட பேட்ரியார்க்குகள்!

ஐரோப்பாவின் இருண்ட காலத்தின் மத்தியிலே (கி.மு. 400-1500) முக்கியத் திருச்சபையின் வரலாற்றிற்குள் வராமலேயே உலக நாடுகளில் அருட்பணி ஆற்றின பலர். முஸ்லீம் அரசுகளுக்கு எதிரான "சிலுவை யுத்தமே ஊழியம்" என்று பல அப்பாவிக் கிறிஸ்தவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்த உலகத் திருச்சபைத் தலைவர்கள் மத்தியிலும், இல்லை, சுவிசேஷமே தீர்வு என்று அவர்கள் மத்தியில் புறப்பட்டுச் சென்ற பல துறவிகள்.

பொதுஜனப் பழக்கத்திற்குள் வேதாகமத்தைக்கொண்டுவந்துசமுதாயத்தில் ஒளியேற்றுவதற்காய் தம் ஜீவனைப் பணயம் வைத்து மொழிபெயர்ப்புச் செய்த ஜான் ஹஸ் மற்றும் ஜான் விக்ளிப், மூடப்பழக்கங்களிலும், குருட்டு விசுவாசத்திலும் மூழ்கிக் கிடந்த ஐரோப்பாவின் சபைகளிலே சத்திய ஒளியேற்றின மார்ட்டீன் லூத்தர் மற்றும் புராட்டஸ்டாண்டு இயக்கத்தில் அவரது கூட்டாளிகள்.

அதின்பின் எழுந்த நவீன கால மனப்போங்கு மறுபடியும் வேதாகமத்தைப் பின்னுக்குத் தள்ளின சூழலில், தேவபக்தியுடன் சுவிசேஷ வாஞ்சையினால் நிறைந்து, கடல் கடந்து சென்று, ஆங்காங்கே கோதுமை மணிகளாய் மாறி(மரித்து)விட்ட மொரேவியர்கள், பக்தி மார்க்கம் மூலம் ஜெர்மனியின் பல்கலைக் கழகங்களிலேத் தாக்கத்தை ஏற்படுத்தி, சீகன்பால்கு போன்ற மிஷனெரிகள் உருவாகக் காரணமான ஆகஸ்டு ப்ராங்கே மற்றும் ஸ்பீனர்.

புராட்டஸ்டாண்டு சபைகளின் முதல் மிஷனரியாய் தமிழகம் வந்த சீகன்பால்குக்கு உறுதுணையான புளுச்சா, ஐரோப்பாவின் சபைகளிலே தனிமனித எழுப்புதலுக்கென்று தேவனால் பயன்படுத்தபட்ட ஜோனத்தான் எட்வர்ட்ஸ்,

பிரெய்னார்டு, டி.எல். மூடி, ஒயிட்பீல்டு, ஜான் வெஸ்லி. இந்த எழுப்புதலின் பிளம்பாய் ஏற்பட்ட பல சமுதாய மாற்றங்கள் (வில்பர்போர்ஸ் - அடிமை ஒழிப்பு) மற்றும் மிஷனெரித் தாகம், **"நவீன சுவிசேஷ யுகத்தின் தந்தை"** எனப்படும் வில்லியம் கேரியை பாரதத்திற்கு அனுப்பியது! தொடர்ந்து ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா மற்றும் ஆசியாவிற்குப் புறப்பட்டுச் சென்ற பல ஐரோப்பிய மிஷனெரிகள்.

தென்தமிழகத்தில் பிரான்சிஸ் சேவியர், ராபர்ட் டி நொபிலி, ஜோர்டன், வீரமாமுனிவர் மற்றும் ஸ்வார்ட்ஸ், ரேனியஸ், பேரன்புருக், ரிங்கல் தோபே, ராக்லண்ட், மார்காசியஸ், போப், கால்டுவெல், ஸ்வெய்ன்சன், வாக்கர், டக்கர், எமி கார்மிக்கேல் இன்னும் எத்தனை எத்தனைத் அருட்பணித் தலைவர்கள்!இவர்களுக்குத் தோள் கொடுத்த சத்தியானந்தன், தாவீது சுந்தரானந்தம், வேதமாணிக்கம், குளோரிந்தா என்னும் உள்ளூர் முன்னணித் தலைவர்கள். பல ஜாதி (மக்கள் கூட்டங்கள்)க் கிறிஸ்தவப் பெரியவர்கள்.

திருநெல்வேலியிலிருந்து மத்திய இந்தியாவிற்கு 1800களிலே மிஷனெரிகளாய்க் கடந்து சென்று அங்கே விதைக்கப்பட்ட வயதான, மறக்கப்பட்ட திரு. ஞானசிகாமணி உட்பட இரு குடும்பங்கள். ஆந்திராவில் மிஷனெரிப் பணியாற்றித் திரும்பிய பின், சுத்தாங்கத் திருச்சபையை நிறுவிய சாமுவேல் மற்றும் சாலமோன் பாக்கியனாதன் சகோதரர்கள்.

மிஷனெரிகள் இருக்கும்போதே, உள்ளூர்த் திருச்சபைகளுக்கு சுவிசேஷ பாரத்தைக் கொடுத்ததோடு, அவைகளுக்காய் உரிமைக்குரல் எழுப்பி, அவைகளை ஒன்றாய் இணைப்பதற்காய்ப் போராடினஇளம் பேராயர் சாமுவேல் அசரியா.

மிஷனரிப் பணித்தளங்கள் உள்ளூர்த் திருச்சபைகளாய் மலர்ந்த போது, சங்கங்களுக்கும் (நெல்லைச்)சபைகளுக்கும் பாலமாய் மிக அரிதான பணியை ஆற்றின இருதரப்புப் பேராயர்கள் -செல்வின், ஸ்டீபன் நீல், ஜெபராஜ், காரட், தானியேல் ஆபிரகாம். இவர்களைத் தொடர்ந்து, இவர்களை போல், தேவன் நமக்குத் தந்து வரும் பேராயர்கள், சபைகுருக்கள், உள்ளூர் சபைத்தலைவர்கள், நம் மத்தியிலிருந்து தேவன் எழுப்பியுள்ள மிஷனெரிகள், மிஷனெரி இயக்கத் தலைவர்கள், சிறு/பெரும் எழுப்புதல் ஊழியத் தலைவர்கள், ஜெபக்குழுத் தலைவர்கள்.

இப்படிப்பட்ட தலைவர்களை உருவாக்குவதற்காய் தேவன் பயன்படுத்தும்நம் குடும்பங்கள், சபை ஊழியர்கள், கிராம பள்ளி / ஓய்வு நாள் பள்ளி ஆசிரிய் ஆசிரியைகள், வாலிபர் / பெண்கள் (ஆண்கள்?) ஜெபக்குழுத்தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள்.

இவர்களுக்காய் ஆண்டவரைத் துதிப்போம்! நமது அழைப்பு என்ன என்று யோசிப்போம்!

**யார் தலைவன்?**

ஒரு குறிப்பிட்டக் கூட்டமாகிய தேவ மக்கள்தங்களுக்கான தேவ நோக்கங்களை நிறைவேற்றும்படி, தேவன் தனக்குத் தந்துள்ள திறமைகள் மற்றும் பொறுப்புகளைப் பயன்படுத்தி, அவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துபவனே வேதாகம அடிப்படையில் தலைவன்.

(கிளின்டன்- பக்.245)

**தலைவர்களில் 4 விதம்**

பலர் - பின் வாங்கிப் போய்விடுகிறார்கள்
பெரும்பான்மையோர் - தாம் வளர்வதை நிறுத்துவதால், பயனற்றவர்களாகிவிடுகிறார்கள்
சிலரோ- தவறு செய்து தண்டிக்கப்படுகிறார்கள்
வெகுசிலரே - தொடர்ந்து வளர்ந்து, நேர்த்தியாய் ஓட்டத்தை நிறைவு செய்கிறார்கள்

(கிளின்டன்- பக்.201)

**நாம் எப்படி?**
**இளம் தலைவர்களை எப்படி அடையாளம் காண்பது?**

தாகம், தன்னார்வம், தாக்கம்!
ஒரு குறிப்பிட்டத் தேவை/மக்கள், பிரச்சினையைக் குறித்த வாஞ்சையும், தாகமும். (கிதியோன்)
அதைத் தீர்ப்பதற்காய் தன்னார்வமாய் எடுக்கும் முயற்சிகள். (மோசே)
இருக்கிற இடத்தில் தலைவர்களாய் ஒளிர்கிறார்களா?...(பேதுரு, பவுல்)
இப்படிப்பட்டவர்களைத் தேவன் அழைத்து, நொறுக்கி, உருவாக்கி, அவரது உன்னத பெலத்தையே சாரும்படி செய்து, மாபெரும் காரியங்களைச் செய்ய பயன்படுத்துகிறார்.
தனக்கடுத்தத் தலைமுறைத் தலைவர்களை உருவாக்காத தலைவன் ஒரு தோல்வியாளன்!
ரால்ப் மகோனி:
"தலைவர்களை உருவாக்குவதே நிலைத்திருக்கும் ஊழியத்திற்கு அடிப்படை".

**தலைவர்களை உருவாக்குவது எப்படி?**

நான் செய்கிறேன் - நீ பார்
நான் செய்கிறேன் - நீ உதவி செய்
நீ செய்-நான் உதவிசெய்கிறேன்
நீ செய்- நான் பார்க்கிறேன்.
(பி. கென்னடி, 1998)

நான் போகிறேன் - நீயும் இப்படியே செய்!
நம் பொறுப்புகள், ஊழியங்கள் மற்றும் வேலைகளே அடுத்தக் கட்டத் தலைவர்களை நாம் உருவாக்கும் பட்டறைகள்!
ஒவ்வொரு பவுலும் பல தீமோத்தேயுக்களை உருவாக்க வேண்டும்! அதற்கு பர்னபாவின் மனப்பாங்கு வேண்டும்!
எங்கே நம் தலைமுறையின் தலைவர்கள்?
எங்கே நம் தலைமுறையின் பர்னபாக்கள்?


திருச்சபை வரலாறு, மிஷனரிகள் வரலாறு, பாடல் வரலாறு, ஆய்வுகள், வரலாற்று புகைப்படங்கள், வரலாற்று பொக்கிஷங்கள் இன்னும் பல சுவாரஸ்யமான தகவல்கள், கட்டுரைகள், வரலாற்றுப் புத்தகங்கள் இன்னும் பல அரிய தகவல்களுடன்.

*journals.tchsportal.co.in*


"Useful and informative.I am planning to write about songs history and missionary stories in our CSI Trichy Tanjore Diocese Magazine Thiruchabai Malar.Please post it will be very useful"

Reno Junia




சங்கை. நோவா சாஸ்திரியார்
தஞ்சாவூர்.

C.L.S கிறிஸ்தவ கீர்த்தனைகளில் 148 - வது பாடலாக இடம்பெற்றுள்ளது. (36 - வது பதிப்பு , வருடம் 2008.) இந்தப் பதிப்பில் , சாஸ்திரியாரின் முழு கீர்த்தனைகள் அடங்கிய புத்தகத்தில் அமைந்துள்ள கீர்த்தனை தலைப்பு வெண்பா மற்றும் முத்திரையடி உள்ள சரணம் இருக்காது. அது 'ஞானப் பதக் கீர்த்தனைகள்' என்ற சாஸ்திரியாரின் கீர்த்தனை தொகுப்பு நூலில் உள்ளது. அதற்கும் சேர்த்து இங்கே பொருள் விளக்கம் தருகிறேன். இதில் உள்ள இந்த கீர்த்தனையை புகைப்பட பதிவாக இணைத்து , இந்த கீர்த்தனையை சீர் பிரித்தும் பதிவிடுகிறேன்.

சீர் பிரித்த பதிவு :
வெண்பா

அந்தி பகலும் அருங் கவலைக்கு உள்ளானால்
எந்த விதம் நாங்கள் ஈடேறுவோம் - சிந்தை நொந்து
ஏவாளின் மக்கள் இரங்கி நின்று கூவுகிறோம்
தேவா இரக்கம் இல்லையோ.

**பல்லவி :**

தேவா இரக்கம் இல்லையோ - யேசு
தேவா இரக்கம் இல்லையோ.

**அனுபல்லவி :**

சீவா பரப் பிரமமே
யோவா திரித்துவத்தின்
மூவாள் ஒன்றாக வந்த
தாவீதின் மைந்தன் ஒரே -- (தேவா இரக்கம் இல்லையோ ......)

**சரணங்கள் :**

1. எல்லாம் அறிந்த பொருளே எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே - கொடும்
பொல்லா மனதுடைய
கல்லான பாவிகளை
கொல்லாது அருள் புரியும்
நல்லாயன் யேசு நாதா -- (தேவா இரக்கம் இல்லையோ .....)

2. எங்கும் நிறைந்த சோதியே ஏழை
பங்கில் உறைந்த நீதியே எங்கள்
சங்கடமான பாவ
சங்கதங்களை நீக்கும்
துங்க இசராவேலின்
வங்கிஷ கிரிடாதி பதி. -- (தேவா இரக்கம் இல்லையோ .....)

3. வேதாந்த வேத முடிவே செக
ஆதாரமான வடிவே ஐயா
தாதாவும் எம்மைப் பெற்ற
மாதாவும் நீயே யேசு
நாதா ரட்சியும் உந்தன்
பாதார விந்தம் துணை. -- (தேவா இரக்கம் இல்லையோ .....)

4. தாயக விண் மன்னாவே வேத
நாயகன் சொன்ன பாவே பொல்லாத
தீய பாவிகளை ஐங்
காயங்களில் மறைத்து
நேயத்து அருள் புரியும்
ஞாயக் கிருபை மேசையா. -- (தேவா இரக்கம் இல்லையோ .....)

**கீர்த்தனையின் பொருள் விளக்கம் :**
**வெண்பா :**

இரவும் பகலும் மிகுந்த கவலைக்கு உள்ளானதால்
எந்த விதத்தில் நாங்கள் மீண்டு வருவோம் - மனம் நொந்து
ஏவாளின் மக்களாகிய நாங்கள் உம்முடைய இரக்கம் வேண்டி அழைக்கிறோம் (கூவுகிறோம்)
தேவா உமக்கு இரக்கம் இல்லையோ.

**பல்லவி :**

தேவா இரக்கம் இல்லையோ இயேசு
தேவா இரக்கம் இல்லையோ.

**அனுபல்லவி :**

ஜீவனுள்ளவரே பரலோகத்தில் முழு முதற் பொருளான யேகோவா (நித்திய ஜீவனுள்ளவர்) , திரித்துவத்தின் மூன்றானவரில் ஒருவராக வந்த தாவீதின் குமாரனே - ஒரே (தேவா இரக்கம் இல்லையோ)

**சரணங்கள் :**

1. எல்லாம் அறிந்த பொருளே எங்கள் இல்லாமையை (குறைவை) நீக்கும் அருளே,
கொடுமையான பொல்லாத மனதை உடைய
கல் போன்ற இதயம் கொண்ட பாவிகளை
கொன்று போடாமல் அருள் (கருணை) செய்யும் ,
நல்ல ஆயன் (மேய்ப்பன்) என் இயேசு நாதா. - (தேவா இரக்கம் இல்லையோ.......)

2 . எங்கும் நிறைந்திருக்கும் பிரகாசமே (வெளிச்சம்) , ஏழையின் பக்கத்தில் நிலைத்திருக்கும் நீதியானவரே ,
எங்கள் சங்கடமான (தொந்தரவான) பாவ தொடர்பினை நீக்கும் ,
பெருமை மிகுந்த இஸ்ரவேலின் வம்ச (பரம்பரை) கிரீடம் சூடிய அரசனே. - (தேவா இரக்கம் இல்லையோ .....)

3. வேதமும் (திருமறை) வேதத்தின் முடிவும் ஆனவரே , உலகத்தின் ஆதாரமான வடிவமே ஐயா ,
தந்தையும் எம்மைப் பெற்ற தாயும் நீயே இயேசு நாதா ,
இரட்சியும். உந்தன் திருப்பாதங்களே துணை. - (தேவா இரக்கம் இல்லையோ .....)

4. கொடை கொடுக்கும் (அல்லது) பூலோகின் , விண்ணக மன்னாவே (யாத்திராகமம் 16 : 14 ,15 & 31. , யோவான் 6 : 58.) , வேதநாயகன் சொன்ன பாட்டே ,
பொல்லாத தீய பாவிகளை உம் ஐந்து காயங்களில் மறைத்து , அன்புடன் அருள் செய்யும் நீதியுள்ள கிருபை மேசியா (அபிஷேகம் பண்ணப்பட்டவர் - கிறிஸ்து.) - (தேவா இரக்கம் இல்லையோ ......)

குறிப்பு : சொற்பொருள் விளக்கம் (சொல்லுக்கு பொருள் விளக்கம்) கொடுத்தால் இந்தப் பதிவு மிக நீண்டு செல்லும் என்பதனால் அதைத் தவிர்த்தேன்.

## (WMMS) வெஸ்லியன் மெத்தடிஸ்ட் மிஷன் சொசைட்டியின் மற்றும் அருட்பணி. ஜான்வெஸ்லி வரலாறு

**சகோ. தானியேல் மோகன்ராஜ், திருவள்ளூர்**

ஜான்வெஸ்லி, மெத்தடிஸ்ட் இயக்கத்தின் உத்வேகம் மற்றும் நிறுவனர் ஆவார். இவ்வியக்கத்தினரை அருட்பணி. ஜான் வெஸ்லிக்கு மரியாதை செலுத்தும் வண்ணமாக 'வெஸ்லியன்' என்று அழைக்கப் படுகின்றனர், இவர்கள் ஒழுங்கு முறையுடன் (Method) கடவுள் பக்தி அவசியம் என்ற வெஸ்லியின் போதனையை, கொள்கையாக கடைப்பிடித்து வருகின்றனர்.

இங்கிலாந்தில் 1735 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜான் வெஸ்லியும் அவரது சகோதரர் சார்லஸ் வெஸ்லி மற்றும் அவருடைய நண்பர்கள் ஊழியத்தில் ஈடுபட்ட போது அவர்களை 'மெத்தடிஸ்டுகள்' என்ற புனை பெயரை வைத்து அழைத்தனர். பின்னர் அப்பெயரே தங்களின் இயக்கத்திற்கு தனித்தன்மை வாய்ந்த பெயராக மாறியது. அவர்களின் மிஷினரி பணியின் மூலமாக உலகமெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு கிறிஸ்துவைக் வெளிக்காட்டிய பெருமை அவர்களையே சாறும். மெத்தடிஸ்ட்களின் ஊக்கமான ஜெபம், ஆவிக்குரிய இறைச்செய்தி, கனிவான கவனிப்பின் மூலம் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

### ஜான்வெஸ்லி

ஜான்வெஸ்லி ஒரு சிறந்த ஆக்ஸ்ஃபோர்டு அறிஞர் ஆவார், இருப்பினும் பரிசுத்த வேதாகமமே எல்லாவற்றினும் மிகச் சிறந்த அறிவு பொக்கிஷம் என்று கருதி அதையே சார்ந்து வாழ்ந்தவர். கடவுளின் மீதானஅபரிவிதமான விசுவாசம், வேதாகமத்தை ஆழ்ந்து படித்ததின் மூலமாக தன்னுடைய சொந்த இரட்சிப்பை உறுதிப்படுத்தியவர். இதுவே இங்கிலாந்தில் பிரதான ஆன்மீக மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தது. சாதாரண மக்களுக்கு நன்மை அளிப்பதற்கான அவரது தொலை நோக்குசிந்தனையுமாயும் உந்துதலாய் இருந்தது. இதின் மூலமாய் அநாதைகளுக்கு மறுவாழ்வு, வேலைவாய்ப்பு திட்டங்கள், ஏழைகளுக்கான மருத்துவ உதவி, மனிதாபிமான மற்ற சிறைகொடுமை சீர்திருத்த முயற்சிகள் மற்றும் அடிமை முறை ஒழிக்கப்பட தனது பெரும்பாலான நேரத்தை வெஸ்லி செலவிட்டார்.

ஒவ்வொருகிறித்தவர்களுக்குதங்கள் நடைமுறை வாழ்க்கைக்கு, வேதாகமத்தின் மீதான நம்பிக்கை அத்தியாவசியமானது என கட்டளையாக கூறினார், இது இன்னமும் வெஸ்லியனின் இன்றியமையாத அம்சமாகும்.

1700ஆண்டு வாக்கில் கால்நடையாகவும், குதிரை அல்லது வண்டிமூலமாக, வெஸ்லி ஆண்டு ஒன்றுக்கு 4,000 மைல்களுக்கு மேலாக பயணித்து குளிர், பனி என்று பாராமல் ஆண்டவருடைய அன்பை மக்களுக்கு போதித்தார். தன்னுடைய வாழ்நாளில் சுமார் 40,000 பிரசங்கங்களை பிரசங்கித்தார்.

ஒரு நாள் நடு இரவை தாண்டி வெஸ்லி குதிரையில் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருக்கும் போது ஒரு கடுமையான குரல் 'நிறுத்து' என்று கூறுவதை கேட்டார். குதிரையை நிறுத்திய போது, ஒருதிருடன், கத்தியை காட்டி கையிலிருக்கும் பணத்தை கேட்டான், பணத்தை கொடுக்காவிட்டால் உயிரை எடுப்பதாக மிரட்டினான்.

வெஸ்லி தன் கையிலிருந்த சில காசுகளை அவனிடம் கொடுத்தார். அவன் வேறு இடத்தில் பணத்தை ஒளித்துவைத்துருப்பாரென்று அந்தகுதிரையை தேடிய போது, ஒரு சில புத்தகங்களை மட்டும் கண்டு ஏமாற்றத்துடன், திரும்பி ஓட ஆரம்பித்த போது, வெஸ்லி அந்த திருடனை பார்த்து, 'நில், உனக்கு தருவதற்கு என்னிடம் ஒன்று இருக்கிறது'என்று கூறினார். அந்த திருடன் எதையோ கொடுக்கபோகிறார் என்று எண்ணி, திரும்பி அவரை நோக்கி வந்தான். வெஸ்லி கிறிஸ்துவின் அன்பு நிறைந்தவராக அவனிடம், 'என் நண்பனே, நீ ஒரு நாள் இந்த வாழ்வை வாழ்ந்ததற்காக வருத்தபடுவாய், அப்படி வருத்தப்படும் போது, நினைத்து கொள், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி உன்னை சுத்திகரிக்கும் என்று கூறினார். அந்த திருடன் அதை கேட்டுவிட்டு, திரும்ப தன் வழியே வேகமாய் கடந்து போனான், வெஸ்லி, அவன் இரட்சிக்கப் பட வேண்டுமே என்று ஜெபித்தவராக கடந்து சென்றார்.

சிலவருடங்கள் கழித்து, வெஸ்லி, சாயங்கால ஆராதனை கூட்டத்தை முடித்து, வெளிவரும் போது, அநேகர் அவரை காண வேண்டும் என்று முந்தியடித்து கொண்டு வந்தார்கள். அதில் ஒரு மனிதர், எப்படியாவது அவருடன் தான் பேச வேண்டும் என்று அங்கிருந்த மூப்பர்களிடம் மன்றாடினார். அப்படி பேச அவருக்கு தருணம் கிடைத்த போது, அந்த திருடன் தான் தான் என்றும், இப்போது தான் ஒரு தொழிலதிபர் என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக தான் தேவனின் பிள்ளை என்றும் அவர் வெஸ்லியிடம் கூறினார். பின்னும் அவர் 'ஐயா, உங்களுக்கு மிகவும் நன்றி, நீங்கள் அன்று அந்த வார்த்தைகளை சொல்லாதிருந்தால் நான் இன்னும் திருடனாகவே இருந்திருப்பேன், நான் உங்களுக்கு மிகவும் கடமை பட்டிருக்கிறேன்'என்று கூறி அவரது கரத்தை எடுத்து முத்தமிட்டார். அப்போது, வெஸ்லி, "இல்லை, என் நண்பனே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம் பாவங்களை நீக்கி நம்மை சுத்திகரித்த படியால், அவருக்கே நாம் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார்.

தொடரும் ...

Very much
appreciate
your efforts.
Thank you so much
for collecting
and presenting us with
Church history,
about missionary
work and
people of the past.
Special appreciation.
Prayers and
wishes for the
future

-Wilsie Alfred

# திரும்பிப் பார்ப்போம் !

மோதிலால் ஜோயல்

பத்திரிக்கையாளர் ஜாவேத் நக்வி 'The Public Intellectual in India' என்ற புத்தகத்தில் கூறிய ஒரு சம்பவத்தைக் கூறி ஆரம்பிக்கிறேன். '1950 களில் தூர்தர்ஷன் 'ஸ்வயம் சித்த' (Swayam Siddha) என்ற திரைப்படத்தை ஒளிபரப்பி வந்தது. அதன் மையக்கருத்து இன்றைய இந்தியாவில் தெளிவாய் எதிரொலிக்கிறது. கதையின் சுருக்கம் இதுதான். ஒரு கிராமத்தில் இந்துப்பெண் ஒருத்தி வசித்து வருகிறாள். அவளது கணவனுக்கு வாய் பேச முடியாது. காதும் கேட்காது. இந்நிலையில், அந்த கிராமத்து பூஜாரி அந்தப் பெண்ணிடம், 'நம் கிராமத்தில் இருக்கும் கிறிஸ்தவ மிஷனரிகளை இங்கிருந்து வெளியேற்றிவிட்டால், உன் கணவன் குணமாவான்' என்கிறார். அவளும் கிராம மக்களிடம் இதைக்குறித்துப் பேசுகிறாள். பின்னர், கிராமத்தினர் அந்த மிஷனரிகளை அடித்து, அங்கிருந்து வெளியேற்றுகின்றனர். அவளது கணவன் குணமானான்.

'இதை வாசித்த அன்று, எனக்கு இரவில் தூக்கமே வரவில்லை. எவ்வளவு சாமர்த்தியமாக, இலகுவாக நம் தேசமக்களின் மனதில் மிஷனரிகள்பற்றிய வெறுப்பை உருவாக்கி இருக்கிறார்கள், யார் இதைப் பின்னணியில் இருந்து செய்திருப்பார்கள் என்று நான் சொல்லவேண்டிய தேவையில்லை என்று எண்ணுகிறேன். உங்களுக்கேத் தெரிந்திருக்கும். என்னுடைய ஆதங்கம் என்னவென்றால், மிஷனரிகள் பற்றி ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கி, மிஷனரிகள் இந்திய காலாச்சாரத்திற்கு எதிரானவர்கள், பணத்திற்காக மதமாற்றம் செய்கிறார்கள் என்று பிரச்சாரம் செய்து, அதிகமான மக்கள் மத்தியில் கிறிஸ்தவ வெறுப்பை 'அவர்கள்' உண்டாக்கியிருக்க, திருச்சபையாகிய நாம் மிஷனரிகள் இந்திய சமுதாயத்திற்கும், கலாச்சாரத்திற்கும் செய்த காரியங்களை நினைவில் வைத்திருக்கிறோமா? கொண்டாடுகிறோமா? என்பதே.

நான் சிலகாலம், மகாராஷ்டிரா மாநிலத்தின் பால்கர் மாவட்டத்தில்' டஹானு' (dahanu) பகுதியில் ஊழியத்திற்கு உதவியாய் இருந்தபோது, ஒருநாள் அங்கிருந்த ஒரு CNI ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். ஆலயத்திற்கு அருகில், பாழடைந்த ஒரு 'உருவச்சிலை' இருந்ததைக் கண்டேன். அவர் வெளிநாட்டில் இருந்து அங்குவந்து ஊழியம் செய்த ஒரு மருத்துவ மிஷனரி என்று பின்னர் அறிந்துகொண்டேன். அந்த மிஷனரி பற்றிக் கூடுதல் தகவல்கள் அந்த ஆலய அங்கத்தினர் அநேகருக்குத் தெரியவில்லை. தேவன் மிஷனரிகள் மூலமாய் இந்திய சமுதாயத்திற்கும், கலாச்சாரத்திற்கும், நம் ஊருக்கும் செய்த காரியங்களை நாம் மறப்பது 'கிறிஸ்தவ விரோதிகள்' பொதுஜன மத்தியில் வெறுப்பைத் தூண்டுவதைவிட மோசமானக் காரியமென்று நான் கருதுகிறேன். அவர்கள், மிஷனரிகள் செய்யாததைச் செய்ததாகக் கூறுகிறார்கள், நாமோ, செய்த காரியங்களைப்பற்றி பொதுவெளியில் பேச மறுக்கிறோம்.

கவனியுங்கள்! மிஷனரிகளின் பெயரைத் தூக்கிப்பிடிப்பதும், மிஷனரி பெயர் அச்சிடப்பட்ட டீ - ஷர்ட்களை அணிவதாலும் பிரயோஜனமுண்டா என்று எனக்குத் தெரியவில்லை! மிஷனரிகள் செய்த ஊழியங்களை, ஆற்றிய பணிகளை படித்துணர்ந்து, நம் தேசமக்களின் ஆன்மீக, சமுதாய விடுதலைக்காக நாமும் செயல்பட முனைவதே அர்த்தமுள்ள நினைவுகூருதலாகும் என்று நான் எண்ணுகிறேன். இதற்காக, முதலில் மிஷனரிகள் இந்திய சமுதாயத்திற்கு செய்தது என்ன என்பதை நாம் தெளிவாய் அறிந்திருக்கவேண்டும். அந்த வகையில், ஈக்காடு பகுதியில் வாழ்ந்த தலித்துகளின் ஆன்மீக மற்றும் சமுதாய விடுதலைக்காகப் போராடிய ஒருவரைப் பற்றி இன்று தெரிந்துகொள்ளலாம்.

**குழந்தப்பருவம், தேவ அழைப்பு**

வில்லியம் கௌடீ (William Goudie) 6.5.1857 அன்று ஸ்காட்லாந்தில் பிறந்தார். தேவபக்தியுள்ள அம்மாவாலும், போதகரான அப்பாவினாலும் வளர்க்கப்பட்டார். தன் செல்லமகன் கௌடீ ஒரு ஊழியக்காரனாக மாறவேண்டும் என்பது அம்மாவின் ஆசை. அவரது எட்டாம் வயதில், திடீரென்று அவரது அம்மா மரித்துப்போனார். டி. எல். மூடி மற்றும் சாங்கியின் எழுப்புதல் பிரசங்கங்கள் கௌடியை ஊழியம் செய்யத் தூண்டியது. ஒருநாள் மாலைநேரம், திருச்சபையில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில், ஊழியம் செய்யத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுத்தார் கௌடீ. தேவசித்தத்தை நிறைவேற்ற, 1879 ஆம் ஆண்டு Richmond வேதாகமக் கல்லூரியில் சேர்ந்தார். 1881 ஆம் ஆண்டு ஊழியராக அபிஷேகம் செய்யப்பட்டார். தேவன் இவரை இந்தியாவிற்கு மிஷனரிப்பணி செய்ய அழைத்தபோது, அதைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார். கீழ்ப்படிந்தார்.

**ஆரம்பகால ஊழியம்**

1882 ஆம் ஆண்டு சென்னை வந்த இவர், ஆரம்பத்தில் அங்கிருந்த ஆங்கிலத் திருச்சபைகளில் ஊழியம் செய்துவந்தார். பின்னர், அவர் தமிழையும், தெலுங்கையும் நன்கு கற்று, உள்ளூர் மக்களிடம் அவர்களது தாய்மொழியிலேயே பேசி ஊழியம் செய்தார். 1883 ஆம் ஆண்டு, கௌடீ திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஈக்காடு கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். கிராமப்புறங்களில் இருந்த தீண்டத்தகாதவர்கள் மேல் அதிகக் கரிசணைக் கொண்டார். 1885 ஆம் ஆண்டு, எலிசபெத் அம்மையாரை திருமணம் செய்தார். இவர்களுக்குப் பிறந்த முதல் குழந்தை மரித்தபோதும், மிஷனரி தம்பதியினர் சோர்ந்துபோகாது ஊழியம் செய்தனர்.

**தலித்துகளுக்காகத் தியாகப்பணி**

கௌடீ எங்கு ஊழியம் செய்தாலும், மக்களின் ஆவிக்குரிய நலனோடு சேர்த்து அவர்களின் பொருளாதார மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார் . எதிர்ப்புகளை பொறுமையாய் சகித்தார். ஒரு சமயம், உயர் ஜாதி மக்கள் அவர் மீது கற்களை வீசியபோது, 'நீங்கள் என்மீது கல்மழை பொழிந்திருக்கிறீர்கள். தேவன் உங்களுக்கு அரிசி மழையைத் தருவார்' என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார்.

தலித்துகளுக்கு இழைக்கப்படும் அநீதியைப்

பற்றி மெட்ராஸ் அரசாங்கத்திடமும், பிரிட்டிஷ் பாரளுமன்றத்திலும் முறையிட்டு, தலித்துகளுக்கான உரிமை மறுப்புகளில் அரசாங்கம் தலையிட வழிசெய்தார். 1886 ஆம் ஆண்டு, கிறிஸ்தவர்களான 16 தீண்டத் தகாதவர்களின் நிலங்களை இவர் திரும்பப்பெற்றுக் கொடுத்தது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். தீண்டத் தகாதவர்கள் கிராமத்துக் கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று உயர் ஜாதி மக்கள் தடுத்தபோது, கௌடீ கிணறுகளைத் தோண்டி ஜாதிபாகுபாடின்றி அனைத்து மக்களும் தண்ணீர் மொண்டு கொள்ள வழிசெய்தார். மேலும் தலித்துகள் கல்வி கற்க வேண்டுமென்று, திருவள்ளூரில் முதல் உயர்நிலைப் பள்ளியைக் கட்டினார். 1889-1891 காலக்கட்டத்தில் ஏற்பட்ட பஞ்சம் மற்றும் காலரா கொடுந்தொற்றின்போது, பசியால் வாடிய அநேகரைப் போஷித்தார். சிறுவர், சிறுமியருக்கென்று தனித்தனி விடுதிகளை ஆரம்பித்தார். மேலும் ஈக்காட்டில், ஒரு சிறிய மருத்தவமனை, தையல் பயிற்சிபள்ளி மற்றும் லேஸ் தொழிற்சாலை ஆகியவற்றையும் ஏற்படுத்தினார். போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அந்தக்காலக்கட்டத்தில் இவர் நடந்து சென்றும், குதிரை வண்டியிலும், மாட்டு வண்டியிலும் சென்றும் ஊழியம் செய்தார். அவரது விடாமுயற்சியால், 1902 ஆம் ஆண்டு ஈக்காடு கிராமத்தில் வெஸ்லி ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவர் 1922 ஆம் ஆண்டு நிமோனியா காய்ச்சலால் மரித்துப்போனார். Goudie said, "I cannot possibly look on the suffering and oppression that prevail around me, and either close the eyes of my heart, or fold my hands in its presence".

(இவரைப்பற்றி 'முக்தி' என்ற யூடியூப் சேனலில் பதிவு செய்யப்பட்டிருந்த காணொளியில், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் கீழ்க்கண்ட பின்னூட்டத்தை பதிவு செய்திருக்கிறார்: திருவள்ளூரை வடிவமைத்த நவீன சிற்பி வில்லியம் கௌடி ஆவார். சேரிகள்தோறும் சென்று அம்மக்களை நேசித்து கிறிஸ்துவண்டை நடத்தினார் . கல்வியையும் நிலத்தையும் தலித் மக்களுக்கு வழங்கி அவர்களை கைதூக்கிவிட்டவர், போராளி கௌடி. தலித் மக்களுக்கு பஞ்சமி நிலம் ஒதுக்குவதற்கு காரண கர்த்தர் என்பது வரலாற்று உண்மை. கௌடியின் நற்செய்தி பணியால் விளைந்த விளைச்சல் எங்கள் குடும்பம் என்பதை பெருமகிழ்வோடு இங்பதிவுசெய்கிறேன்.)

தங்களுடைய இப்பணி மிகவும் சிறப்பு வாய்ந்தது மனித குல மீட்புக்காக இறைவரின் திரு சித்தத்தை எவ்வித சுயநலமும் இன்றி இத்தேசத்துக்கு கொண்டுவந்த இறை பணியாளர்களை அவர்கள் செய்த பணிகளை நினைவுகூரத் செய்த உம் பணி போற்றுதலுக்குரியது இறைவரின் திரு கிருபை உங்களையும் உங்கள் குடும்பங்களில் இருப்பதாக

- King Paul


**பல அரிய கிறிஸ்தவ தமிழ் புத்தகங்கள் தற்போது நமது இணைய நூலகத்தில்**




www. library.tchsportal.co.in



கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்

மாத இதழுக்காக சந்தா விபரம்

விளம்பரங்களை பிரசுரிக்க பதிப்பாசிரியரை தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| மாத சந்தா | ரூ 60/- + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ரூ 600/- + நன்கொடை |
| ஆயுள்சந்தா | ரூ 3000/- + நன்கொடை |

சந்தா மற்றும் சிறப்பு திட்டங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

நன்கொடை சந்தா செலுத்திய பின்பு செலுத்திய விபரத்தையும்
உங்களுடைய முகவரியையும் மறக்காமல்
கிழே கொடுக்கப்படுள்ள தொலைபேசி அல்லது
மின்னஞ்சல் முகவரி மறக்காமல் தெரிவிக்க
அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
தொலைபேசி: +91 9176780001

# அருள்திரு ஜேசுராஜ் வில்லியம்ஸ் ரங்கசாமி வரலாறு

C. Rungasawmy Williams
Chennai

அருள்திரு ஜேசுராஜ் வில்லியம்ஸ் ரங்கசாமி அவர்கள் 27.02.1892 ஆம் ஆண்டு திரு. ரெபேக்கா ஞானமுத்து மற்றும் அருள்திரு ஜான் ரங்கசாமி(28 ஆண்டுகள் வெஸ்லியன் மெத்தடிஸ்ட் ஆலயத்தில் இறை பணி ஆற்றியவர் 1887-1915) அவர்களுக்கு நான்காவது பிள்ளையாக பிறந்தார். அவருக்கு மூன்று மூத்த சகோதரரும் இரண்டு இளைய சகோதரரும் உள்ளனர். (1) திரு ஜேசு அம்மல் மெர்சி ரங்கசாமி, (2) அருள்திரு. J.WS. ரங்கசாமி, (3) திரு. ஜேசு ரத்தினம் எபினேசர், (4) அருள்திரு. ஜேசூராஜ் வில்லியம்ஸ் ரங்கசாமி , (5) திரு. ஜேசுநேசன் ஜேம்ஸ் ரங்கசாமி மற்றும் (6) திரு ஜெயமுத்து தாமஸ் ரங்கசாமி. தனது தகபனாரின் பணி இடை மாற்றத்தின் காரணமாக அவர் அவ்வப்போது பள்ளியை மாற்றி கொண்டே இருப்பார். 1898 இல் அவர் தனது ஆரம்பப் பள்ளியை பரங்கி மலையிலும் மற்றும் கருங்காலியில் (திருவள்ளூர் மாவட்டம்) உள்ள பள்ளியிலும் பயின்றார். ஆசிரியர் பயிற்சியை 1900-1903 சைதாப்பேட்டை, மதரஸிலும் முடித்தார். பின்னர் 1903 இல் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வெஸ்லியன் மேல் நிலை பள்ளியிலும், 1904 ஸ்காட்லாந்து மிஷன் கல்லூரியிலும் (இப்போது மதராஸ் கிறிஸ்துவ கல்லூரி 'MCC' என்று அழைக்கப்படும்) பயின்றார். கடைசியாக தனது இறையியல் படிப்பை (லண்டன்) சென்று தனது தெய்வீக இளங்கலை பட்டத்தையும் பெற்றார்.

அவரது தாயார் திருமதி. ரெபேக்கா ஞானமுத்து அவர்கள் ஷெப்பர்டு. ஜோஸப் இஸ்ரேல் ஞணமுத்து அவர்களின் சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தனது இறையியல் வாழ்க்கைக்கு முன்னர் இராணுவத்தில் பணி புரிந்து இருக்கிறார். இரண்டு முறை மெசோபொதமியவில் காலாட்கள் படையில் போர் வீரராக இருந்தார். பின்னர் இராணுவ தலைவர் என்னும் பதவியிலும் பெங்களூருவில் பணி ஆற்றி இருக்கிறார்.

**இல்லற வாழ்க்கை:**

அருள்திரு ஜெசுராஜ் வில்லியம்ஸ் ரங்கசாமி அவர்கள், தமிழ் கீர்த்தனை பாடல்களை இயற்றிய அருள்திரு வேதமுத்து மாசிலாமணி அவர்களின் மகள் மா. நேசமணி மாசிலாமணி அவர்களை ஆகஸ்டு மாதம் 22ம் தேதி புதன்கிழமை, பண்ருட்டியில் உள்ள டேனிஷ் மிஷன் ஆலயத்தில் மணந்தார். அருள்திரு. வேதமுத்து அவற்றில் சில (சீர் மிகு வான் புவி, ஆர் இவர் ஆராரோ, தந்தானை துதிபோமே, ஆனந்தமே ஜெயா ஜெயா) போன்ற பாடல்களை இயற்றியுள்ளார். பின்னர் அவரது மாமனாருடன் டேனிஷ் மிஷன் ஊழியத்துடன் இணைந்தார். இந்தத் தம்பதியருக்கு கர்த்தரால் கிடைத்த சுதந்திரம் (1) திருமதி கிளாரா தியடிசியா ரெபேக்கா தாமஸ்,(2) திருமதி. மெர்சி கிங்ஸ் பரி, (3) திருமதி. ரேச்சல் நைட்டிங்கேல் ஜேசு அம்மாள், (4) திருமதி. மேஷோப்ரா மனோகரம் எஸ்தர் ஜோய் மற்றும் (5) திருமதி. பெதென் வில்சன்.

**அவரது இறையியல் வாழ்க்கை:**

அருள்திரு ஜெசுராஜ் வில்லியம்ஸ் ரங்கசாமிஅவர்கள்தனதுவாழ்வைமுழுவதும் கர்த்தர்காகவே அர்ப்பணித்து வாழ்ந்தார். தனது வாலிப வாழ்க்கையிலேயே ( நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை பிரசங்கி 12:1) என்ற வேத வார்த்தைக்கு இணங்க வாழ்ந்தார். தனக்கு ஒப்புவிக்கபட்ட எல்லா வேலைகளிலும் அற்பணிப்போடும் உண்மையோடும் இருந்தார். தனக்காக சிலுவையில் அறையப்பட்டு கிறிஸ்துவுக்காக தன் வாழ்க்கை முழுவதும் கொடுத்திருந்தார். மறுமலர்ச்சியாளர் என்றும் மேய்ப்பர் என்றும் போதகர் என்றும் கிறிஸ்தவர்களால் அழைக்க பெற்றார். ஊர் ஊரூராகவும், கிராமம் கிராமமாகவும், நாடு நாடாகவும் சென்று கர்த்தருடைய வார்த்தையை போதித்து மற்றும் விசுவாசிகளை விசாரித்தும் வந்தார். இந்த சென்னை பட்டனம் முழுவதும் சென்று இங்கும் அங்குமாக போதித்து இருக்கிறார். பர்மா, ரங்கூன், போன்ற பிற தேசங்களின் எல்லைகளுக்கும் சென்று கர்த்தருடைய வார்த்தையை போதித்து இருக்கிறார். அநேக போதகர்கள், மேய்ப்பர்கள், கர்த்தருடைய ஊழியர்கள், என பலர் அவரை குறித்து நற்சாட்சி கொடுக்கும் படி வாழ்ந்து வந்தார். மியான்மார் என அழைக்கப்படும் பர்மாவில் ஒரு முறை மூன்று வேர்ப்பட்ட செய்திகளை ஆங்கிலோ அரங்கில் கொடுத்து இருக்கிறார். (வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே. சங்கீதம் 119:9) இந்த வேத வசனத்தின்படி தனது வழியை காத்து கொண்டார். அவரது மனைவி தனது இளம் வயதில் ஐந்து பெண் பிள்ளைகளை அவரிடம் விட்டு தேவ ராஜ்யம் சென்றார். ஆயினும் ஊழியத்துடன் தனது பிள்ளைகளையும் தனி நபராய் தனது மாமனார் வேதமுத்து மாசிலாமணி உதவியுடன் வளர்த்து நல்ல மருமக்களுக்கு திருமணம் செய்து கொடுத்தார். தனது 40 வது வயதில் REVEREND ஆக பதிவு செய்து தனது ஊழியத்தின் அடுத்தொரு படி சென்றார். அவரது வாழ்க்கை எந்த ஒரு தனி நபரையும் ஈர்க்கும் வகையில் வாழ்ந்தார். (நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்திரம் வைத்துப்போகிறான்: நீதிமொழிகள் 13:22) வேத வார்த்தையின் படி தனது பேர பிள்ளைகளையும் வளர்த்து திருமணத்தில் சேர்த்தும் வைத்தார். தனது 78 வது வயதில் 16.08.1970 ஆம் ஆண்டு தேவ ராஜ்யம் சேர்ந்தார்.(எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே , அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம். சங்கீதம் 90:10) வசனத்தின் படி தேவ பெலத்தால் தேவனுகாக வாழ்ந்தார். கடைசியாக (நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். 2 தீமோத்தேயு 4:7) வசனத்தின் படி வாழ்ந்து வந்தார். மனிதரை சேவிக்காமல் கர்த்தரையே சேவித்து வந்தார்.

# மறைக்கப்பட்ட வரலாற்றை தேடி...

**வ**ரலாற்று சங்கத்தின் புதிய முயற்சியாக மிஷன் பணித்தளங்களையும் பழைய கீர்த்தனை பாடலாசிரியர்களையும், உபாத்தியார்களையும்மற்றும்தற்போதைய வரலாற்று ஆய்வாளர்களிடம் பேட்டி எடுத்து அதை ஆவணமாக்கி இன்றைய திருச்சபை மக்களுக்கும் எதிர்கால இளம் தலைமுறைக்கு கொண்டு செல்லவும் முதல் முயற்சியாக தமிழகம் எங்கும் சுற்று பயணம் செய்து கள ஆய்வுகளை மேற்கொண்டோம்.

பழைய புத்தகங்களை தேடியும், வரலாற்று சுவடுகள் மாத ஆய்விதழை அறிமுகப்படுத்தியும் திருச்சி, தஞ்சாவூர், தரங்கம்பாடி, சென்னை, திருவள்ளூர் போன்ற இடங்களில் உள்ள நம்முடைய வரலாற்று பிரியர்களை சந்தித்த பொழுது எடுத்தபடங்கள்.

..........

1712 ஆம் ஆண்டு லண்டனிலிருந்து ஒரு அச்சு இயந்திரம் ஐரோப்பிய மொழிகளில் அச்சடிப்பதற்கு வந்தது. பிறகு ஹல்லே ஆர்பன் ஹவுஸ் மூலம் அனுப்பப்பட்ட தமிழ் அச்சு இயந்திரம் வந்து சேர்ந்தது . 1713 ஆம் ஆண்டு இந்த இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்தன . இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி , தென் ஆசியாவில் முதன் முதலில் தரங்கம்பாடி அச்சு இயந்திரம் நிறுவப்பட்டு இயங்கியது . தமிழிலும் போர்ச்சுகீசிய மொழியிலும் முதன் முதலில் வேதாகமம் இங்கு அச்சிடப்பட்டது . அந்த பாரம்பரியமான பிரிண்டிங் மிஷினில் நம்முடைய திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாறு சங்க பெயரும் அச்சிடப்பட்டது.



















கிறிஸ்துநாதர் ஆலயம்- கோட்டை
SWARTZ CHURCH (1779)






# என்னில் தாக்கத்தை ஏற்படுத்திய தலைமைத்துவ பண்பாளர்கள்

**அருள்திரு முனைவர் ச. இராஜசேகரன்**
**திருச்சி**

தலைமைத்துவம் என்பது பதவியோ, பட்;டமோ அல்லது அந்தஸ்தோ அல்ல, மாறாக அறிந்தும் அறியாமலும் பிறருடைய வாழ்வில் தன்னுடைய மெய்மை வாழ்வின் மூலம் நேர்மறை தாக்கத்தை இடைவிடாமல் ஏற்படுத்துவதாகும். அண்டுவதற்கு அச்சத்தை ஏற்படுத்தும் ஒருவருடைய பதவியும் பட்டத்தையும்விட மற்றவரின் சுதந்திரத்தை மதிக்கும் தரிசனம் கொண்டவர்களை சிறந்த தலைவராக மக்கள் மதிப்பர் என்பது முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களின் கூற்று. ஒரு தலைவரின் அடையாளம் அவருடைய குணத்தில் இருக்கிறது. தலைவர் தான் போகிற பாதையை அறிந்து, அந்த பாதையில் மற்றவர்களை அழைத்துச் செல்கிறவராகவும் இருக்கிறார். மற்றவர்களின் மேல் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவதே தலைசிறந்த தலைமைத்துவம் என்று ஜான் மேக்ஸ்வெல் கூறுகிறார். வகித்த பதவி மற்றும் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டு என் வாழ்வில் நல்ல தாக்கங்களை ஏற்படுத்திய சில தலைவர்களின் தலைமைத்துவ அடையாளங்களை இக்கட்டுரை வாயிலாக வெளிப்படுத்தி என் நன்றிக் கடனை செலுத்துகிறேன்.

### கிறிஸ்துவின் மனப்பான்மை

தாழ்மை, செவிகொடுத்தல், மனதுருக்கம், மக்களை ஆற்றுப்படுத்தி போதித்தல், குணமாக்குதல் மற்றும் மன்னித்தல் அத்துடன் மக்களோடு மக்களாக தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளுதல் போன்ற கிறிஸ்துவின் தலைமைத்துவ மனப்பான்மையை அல்லது பண்புகளை பவுல் பல்வேறு சூழல்களில் பட்டியலிடுகிறார். இப்பண்புகளுடன் எனது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியவர் திரு. கிறிஸ்டோபர் தாமஸ் அவர்கள். நண்பர் சுவிசேஷ மிஷனெரியும் குஜராத்தில் சௌதரி மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்ப்பு செய்யும் பணியுடன் தென்மேற்கு பிராந்திய ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். நான் 1990 ஆண்டு அவருக்கு அலுவலக உதவியாளராக நியமிக்கப்பட்டேன். அவர் என்னுடனும் மற்ற மிஷனெரிகளுடன் நடந்துகொண்ட விதம் மிகவும் மதிக்கத்தக்கதாயிருந்தது. குறிப்பாக அ வ ர் என்னை நம்பி, அநேக பொறுப்புகளை கொடுத்து, என்னை மெருகேற்றி நான் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிகிறேன் என்ற தாழ்வு மனப்பான்மை என்னில் உருவாகாதபடி மற்ற மிஷனெரிகள் பொறாமைப்படும் அளவு எனக்கு அதற்கான பிரத்தியேக பயிற்சியுடன் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் வழங்கினார். அவர் கொடுத்தப் பணிகளை செய்யத் தேவையான பேச்சு மற்றும் எழுத்துத் தொடர்பு போன்ற திறமைகளை வளர்த்துக்கொள்ள எனக்கு வாய்ப்பாக இருந்தது. அவர் அலுவலகத்தில் இருக்கும் நாட்களில் எனது பணிகளை எந்தவித பதவிப் பாகுபாடும் பார்க்காமல் பகிர்ந்துகொளவதும் என்னுடன் மனம்விட்டு பேசுவதும் கதைகளை ரசிக்கும்படியாக சுவையாக சொல்லும் பாங்கை நான் அதிகம் ரசித்தேன். திருச்சியில் எங்கள் வீடு தேடி வந்து என்னை கண்டு உற்சாகப்படுத்தியதை மறக்கமுடியாது. 30 ஆண்டுகளாக இன்றும் எங்கள் உறவு தொடர்கிறது.

அடுத்து Evangelical Union of India வின் பொதுகாரியதரிசியாக இருந்த திரு. ஜேம்ஸ் இரத்தினராஜ், எளிமை மற்றும் தூய்மை வாழ்விற்கு உதாரணமான தேவ மனிதர். எனது திருமணத்திற்குப்பின் கடவுள் என்னை வேதாகமக்கல்லூரிக்கு சென்று படிக்கும்படி வழிநடத்தினார். நானும் சென்னை இறையியல் கல்லூரியில் சென்று சேர்ந்துவிட்டேன். ஆனால் புதிதாக திருணமான நான் குடும்பமாக சென்னையில் இருப்பதற்கான வழி இல்லாததால் படிக்கவேண்டாம் என்ற எனது குழப்பான தீர்மானத்தை கல்லூரியில் தெரிவித்துவிட்டு செல்ல சென்னை வந்தேன்.

ஜேம்ஸ் அண்ணன் குடும்பத்தை சிறுவயது முதல் நான் நன்கு அறிந்திருந்தால் அவர்கள் வீட்டிற்கு சென்று குளித்துவிட்டு கல்லூரிக்கு செல்வதற்காக அவர்கள் வீட்டிற்கு சென்றேன். எனது காரியங்களை அன்புடன் விசாரித்தவர் எனக்கு காலை சிற்றுண்டி கொடுத்து உபசரித்தார். சாப்பிட்டபின்பு ஜெபம் செய்வோம் என்று சொல்ல, இருவரும் முழங்கால்படியிட்டோம். மிகவும் ஒரு எளிமையான மற்றும் சுறுக்கமாக ஜெபத்தை செய்துவிட்டு, “ராஜா கடவுள் உன்னை படிக்கும்படி சொல்கிறார், நீ கல்லூரிக்குப் போ” என்று சொல்லி, ஒரு சைக்கிளைக் கொடுத்து என்னை அனுப்பினார். அவ்வாறாக அன்று கல்லூரிக்குப் போனதால் இன்று நான் முனைவர் பட்டம் பெற்று வேதாகமக் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணிபுரிகிறேன். ஒரு நிறுவனத்தின் பதவிக்கும் அதிகாரத்திற்கும் அப்பாற்பட்டதுதான் தலைமைத்துவ மனப்பான்மை என்பதை நான் அவருடைய தலைமைத்துவப் பண்புகளிலிருந்து புரிந்துகொள்ளும்படி நடந்துகொண்டார்.

அடுத்து, எளிமை மற்றும் நேர்மையின் இக்கால உருவாக ஊழியர்கள் மத்தியில் திகழும் திரு பேட்ரிக் ஜோஸ்வா அவர்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுகாரியதரிசியாக இருந்த போது, நானும் என் மனைவியும் குற்றஞ்சாட்டப்பட்டு, தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்த காலத்தில், எங்கள் திருமணத்திற்கு முன்பு அவரை சந்திக்க அவருடைய வீட்டிற்கு காலை நேரத்தில் சென்றோம். எங்களை அவர் ஒரு குற்றவாளியாக கருதாமல் அவருடைய வீட்டு விருந்தினரைப் போன்று வரவேற்று, எங்களுக்கு காலை சிற்றுண்டியை அவரே ஹோட்டலுக்கு சென்று வாங்கிவந்து பரிமாறினார். எங்கள் தரப்பு வாதத்தை பொறுமையுடன் கேட்டார். பிரச்சனைகளை மனிதரிலிருந்து பிரித்துப்பார்க்கும் மனப்பான்மையே கிறிஸ்துவின் தலைமைத்துவ மனப்பான்மை என்பதை அறிந்துகொண்டேன்.

அவர்தான் என்னை சென்னை வேதாகமக் கல்லூரியில் சென்று படிக்க அத்தனை ஏற்பாடுகளையும் செய்தார்.

**கிறிஸ்துவின் அதிகாரம்**

வானத்;திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகவே நீங்கள் என்னுடைய அதிகாரத்தின் உதவியுடன் உலகம் முழுவதும் புறப்பட்டுப்போய் மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் நற்செய்தி அறிவித்து என்னுடைய சீடர்களாக்குங்கள் என்று இயேசு சொன்னார். அவர் சீடர்களை அழைத்தபோது அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும் அவருடைய அதிகாரம் இல்லாமல் அவருடைய பணியை நாம் சிறப்பாக நிறைவேற்றமுடியாது என்றும் இயேசு கூறுகிறார். இயேசு அவரிடம் இருந்த அனைத்து அதிகாரத்தையும் அவருடைய சீடர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். ஆனால் இன்று பொறுப்புகளை பகிர்ந்துகொடுக்கிற கிறிஸ்தவ நிறுவனத் தலைவர்கள் தங்களுடைய அதிகாரங்களைப் பகிர்ந்துகொடுப்பதில் இயேசுவைப் போல் இல்லாமல் கஞ்சத்தனமாகாவும் குறுகிய மனப்பான்மை உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

மீண்டும் திரு. கிறிஸ்டோபர் தாமஸ் அண்ணன் அவர்களையே நான் இதற்கு ஒரு உதாரணமாக கொண்டுவருகிறேன். மொழிபெயர்ப்பு பணி காரணமாக அவர் பிராந்திய அலுவலகத்திற்கு அதிகம் வரஇயலாததால் என்னிடம் பல்வேறு பொறுப்புகளை கொடுத்தார். அத்துடன் அவைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களையும் கொடுத்தார். இப்போதுதான் வந்த இவனுக்கு இவ்வளவு பொறுப்பும் அதிகாரமுமா என்று பல மிஷனெரிகளும் பொறாமை மற்றும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. ஆனாலும் பிராந்தியப் பணியில் எந்த தொய்வும் இல்லாமல் மென்மேலும் அவருடைய காலத்தில் சிறப்புற்றிருந்தது. நான் சில ஆண்டுகளுக்குப் பின்பு இந்திய சுவிசேஷ திருச்சபையின் குஜராத் பொறுப்பாளராக சென்றபோது, "உனது பதவி மற்றும் பட்டம் இங்கிருக்கும் போதகர்களை எதுவும் பாதிக்காது ஆனால் உன்னுடைய ஆவிக்குரிய அதிகாரம் மட்டுமே அவர்களை பாதிக்கும்" என்று எனக்கு ஆலோசனை வழங்கினார். அதனை தங்க வாக்கியமாக எடுத்துக்கொண்டு கடுமையாக உழைத்து, ஐந்து ஆண்டுகளில் செய்யக்கூடிய பணியை இரண்டு ஆண்டுகளில் செய்து முடித்தேன். பூகம்பம் மற்றும் உபத்திரவம் போன்ற அனைத்துப் பிரச்சனைகளையும் சமாளிப்பதற்கு எனது பதவி அதிகாரமல்ல, எனது ஆன்மிக அதிகாரமே குஜராத் போதகர்களின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவும் பெற ஏதுவாக இருந்தது.

**கிறிஸ்துவைப்போல ஏற்றுக்கொள்ளுதல்**

ஜாதி, வகுப்பு, மதம் போன்ற எந்த வேறுபாடின்றி அனைத்து மக்களிடமும் நெருக்கமாக இருந்த இயேசுவை அநேகர் அந்நாட்களில் குற்றஞ்சாட்டினார்கள். குற்றஞ்சாட்டியவர்களைப்பற்றி அவர்கள் கவலைக்கொள்ளவில்லை. "ஒரு செயலை விரும்பாவிட்டாலும் அதை விரும்பி செய்ய வைப்பவரே தலைவர்" என்பது ஒரு சீன பழமொழி. திறந்த கட்டமைப்பில் வாழ்ந்த இயேசு, அவரை யூத சமய கட்டமைப்புக்கு உட்பட்டவராக மாத்திரம் அடையாளப்படுத்திக்கொள்ளாமல் அனைவருக்கும் ஊழியம் செய்பவராகவே தன்னை கருதிக்கொண்டார். அவரிடம் வந்த மக்களை மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக கருதி அவர்களை மனதுருக்கத்துடன் ஏற்றுக்கொண்டார். "தலைவர்கள் தலைவர்களாக பிறப்பதில்லை மாறாக சூழல் அவர்களை தலைவர்களாக பயிற்றுவிக்கிறது" என்று மு. ராஜேந்திரன் கூறுகிறார். மக்களை அவர்களுடைய சூழ்நிலையுடன் ஏற்றுக்கொண்டதால் இயேசுவை மக்கள் தலைவராக உருவாக்கியது. அவருடைய இருதயத்தில் எந்த தகுதியும் இல்லாதவர்களுக்கும் ஒரு இடம் இருந்தது.

அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை கொண்ட தலைவர்களில் நான் கண்டு அனுபவித்த தலைவர்கள் இந்திய சுவிசேஷத் திருச்சபையின் முதல் பேராயர் எஸ்றா சர்குணம் மற்றும் டாக்டர் சந்திரசேகர் (நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னாள் துணைத்தலைவர் மற்றும் நவஜீவன் சேவா மண்டலின் முன்னாள் இயக்குநர்) ஆவர். கிறிஸ்தவ நிறுவனங்களில் இருந்து பல்வேறு காரணங்களுக்காக புறக்கணிக்கப்பட்டவர்களை மன்னித்து, ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு மறுவாய்ப்பு ஒன்றை வழங்கி, அவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் என்பதை நிருபிக்கும் ஒரு வாய்ப்பை வழங்குகிறவர்களாக நான் காண்கிறேன். அதனையே என் வாழ்வில் நான் அனுபவித்தேன். இருவரும் எனக்குக் கொடுத்த இறையியல் கல்விக்கான முழு ஆதரவும் ஊழிய வாய்ப்புகளும் என் ஊழிய வாழ்வின் படிகட்டுகளாக அமைந்தன. என்னைப் போன்ற பலரை அவர்கள் ஏற்றுக்கொண்டதால் பலர் புதுபாதையில் பயணிக்கின்றனர். அடிப்படை கிறிஸ்தவ அனுபவம் கொண்டு பயிற்சிகளை பெற்றவர்களை எளிதில் புறந்தள்ளாமல் அவர்களுடைய பெலவீனத்தில் உதவும் மேலான நோக்கம் கொண்டவர்கள். கடவுளை தனிப்பட்ட வாழ்வில் அனுபவிக்கும் வரை புறஜாதி மக்களை ஏற்றுக்கொள்வதில் சிரமப்பட்ட யூதனாகிய பவுல், கிறிஸ்தவனான பின்பு தலைகீழாக மாறினான்.

"தலைவர்கள் பக்தகோடிகளை உருவாக்கிறவர்கள் அல்ல, மாறாக அதிகத் தலைவர்களை உருவாக்குகிறார்கள்" என்று டாம் பீட்டர் கூறுகிறார். இயேசுவும் அவ்வாறே 12பேரை சீடர்களாக அழைத்தார் ஆனால் அவர்களை சிநேகிதர்களாக உருவாக்கினார். அதனால்தான் அவர்களிடம் எந்த ஒளிவுமறைவும் இன்றி அனைத்தையும் பகிர்ந்துகொண்டு அவர்களை நம்பி பெரும் பொறுப்பை ஒப்படைத்தார். அநித்தியமான சட்டத்திட்டங்களை கைக்கொள்ளும் ஒரு நிறுவனத்தின் தலைவராக இருப்பதைவிட நித்தியமான தலைமைத்துவப்பண்புகளை கொண்ட இயேசுவைப்போல நடமாடும் தலைவராக நம்மை காண்பவர்கள் அனைவருக்கும் இருக்கவேண்டும். மேலே சொல்லப்பட்ட தலைவர்கள் அவர்களுடைய நிறுவனத்தின் பதவி மட்டும் பட்டத்தினால் அல்லமாறாகஅவர்களுடையதலைமைத்துவ மனப்பான்மை கிறிஸ்துவுக்கு ஒத்திருந்ததால் இன்று அதை நான் தலைமைத்துவத்தின் முன்மாதிரியாக காண்கிறேன்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

# தஞ்சையில் சீர்திருத்த கிறிஸ்தவம்

Rev. T. Irwin Gnanamuthu,
Tanjore

சாஜி (Shahji) (1684-1711) என்ற மராட்டிய அரசன் அருட்பணியாளர்களை தன் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் பணி செய்ய அனுமதிக்கவில்லை. மலபார் (இந்திய) பகுதியை சார்ந்த கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் ஆலயமும் இல்லாமல், குருக்களும் இல்லாமல் வாழ்ந்து வந்தனர்.

1709ல் சீகன்பால்க் ஐயர் தஞ்சைக்கு அருட்பணி செய்யும் நோக்கத்தோடு கால்நடையாக செல்ல முயன்றார். வெள்ளைகார ஐரோப்பியர்கள் தன் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் அனுமதி சீட்டு (Passport) இல்லாமல் பயணிக்க கூடாது என சட்டம் இருந்தது. அனுமதியில்லாமல் சென்றதற்காக போர்த்துகீசிய குருக்கள் சிறைபிடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். எனவே அருட்பணியர் சீகன்பால்க் தரங்கை திரும்பினார். அரசரின் அனுமதிக்காக பின்னர் கடிதம் எழுதிய போது அரசருக்கு பரிசு பொருட்களோடு வரும் கடிதங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதால் அதற்கு பதில் கிடைக்கவில்லை.

தஞ்சாவூரில் கிறிஸ்தவம் வளர அடிகோலியவர் தலித் இனத்தை சார்ந்த இராயல் நாயக்கன் என்கிற இராஜநாயக்கன் ஆவார். தஞ்சாவூர் அரசரின் இராணுவத்தில் பணியாற்றிய இவர் ரோம கத்தோலிக்க சபையில் பிறந்து பல புனிதர்களின் வரலாற்றை வாசித்து, திருமறை வரலாற்றை சிறிதாகவும் படித்திருந்தார். பழைய, புதிய ஏற்பாடுகளை வாசிக்க மிகுந்த ஆவல் கொண்டார்.

1725ல் அரசரின் வேலைக்காக தஞ்சாவூரிலிருந்து மாதவிப் பட்டணத்திற்கு போகும்போது, சத்தியாணந்தன் என்ற ரோம சபை துறவியிடம் நான்கு நற்செய்தி நூல்கள், அப்போஸ்தவருடைய நடபடிகள் அடங்கிய புத்தகத்தை கண்டு, அவருக்கு அனேக நாள் உணவு கொடுத்து, ஒரு தலைப்பாகையை இனாமாக கொடுத்து அப்புத்தகத்தை இரவலாக வாங்கிப் படித்தார். ஆரம்ப முதல் லூக்கா நற்செய்தி நூலின் பாதி வரை ஓலையில் பிரதியும் எடுத்தார்.

1726-ல் தரங்கைக்கு சமீபமான திருக்கடையூருக்கு வந்தபோது இன்னொரு துறவியிடம் நிருபத்தையும், வேறு பல புத்தகங்களையும் கண்டு ஆவலாய் வாசித்தார். பின் தன் சகோதரரோடு தரங்கை சென்று போதனைகளை கேட்டறிந்தார். ஆறுமாத காலம் ஆராய்ச்சி செய்து தஞ்சாவூர் திரும்பி போய், விசுவாசத்தில் பலப்பட்டு ரோம சபையின் தவறான போதனைகளை ஒழித்து சீர்திருத்த சபையில் 1728-ல் தரங்கையில் சேர்ந்தார்.

1728ல் பெப்ரவரி மாதத்தில் ஆரோன் உபதேசியார் வாயிலாக தஞ்சை துளாப்சிங் அரசர் பிரேசியர் (Pressier) ஐயரை அழைப்பித்தார், வைத்தீஸ்வரன் கோயில் ஊரில் சந்தித்த போது நற்செய்தியை கேட்டறித்தார். தன் மகன் திருமணத்திற்கு அரசன் அவரை அழைத்து, தஞ்சை சென்றபோதும் அவரிடம் ஆண்டவரை பற்றி அரசரிடம் பேசினார். ஆகிலும் தஞ்சை தெருவில் பிரசங்கித்த போது, அநேகர் குறிப்பாய் முகமதியர் தடுத்தார்கள். அவர்கள் தீங்கு செய்ய நினைத்தபோது அவர்கள் கைக்கு அரசர் தப்புவித்து தன் வாகனத்தில் தரங்கை அனுப்பி வைத்தார்.

1729ல் ராஜநாயக்கன் இராணுவ பணியை விட்டு முழுவதுமாக நற்செய்தி பணி செய்ய ஆரம்பித்தார். அவருடைய இளைய சகோதரர் சின்னப்பன், இரு கத்தோலிக்க வீரர்களான சவரிமுத்து, சண்டியர் ஆகியோரும் மனமாறினர். ராஜநாயக்கன், அவர் சகோதரரையும் தஞ்சைக்கு உபதேசியார்களாக அனுப்பினர் விரைவிலேயே 40 பேர் மனமாறினர்.

தஞ்சை கத்தோலிக்க கிறிஸ்தவர்களை ஏலாக்குறிச்சியில் இருந்த வீரமாமுனிவர் (பெஸ்கி) இவர்களுக்கு எதிராக தூண்டி விட்டு துன்பத்தை கொடுத்தார். கத்தோலிக்க உபதேசியார் 18 கிராமத்திலிருந்து மக்களை திரட்டிக் கொண்டு ராஜ நாயக்கரின் பெற்றோர் வீட்டை இடித்து, ஊரை விட்டு ஒதுக்கி வைத்தனர்.

தரங்கை அருட்பணியாளர்கள் பெஸ்கி (வீரமாமுனிவர்)க்கு கடிதம் எழுதி துன்புறுத்தலை நிறுத்த கோரினர். ஆனாலும் தஞ்சையில் துன்புறுத்துதல் கிறிஸ்தவர்களுக்கு தொடர்ந்தது. 1731ல் ராஜநாயக்கன்தந்தையைகொலைசெய்தனர். ஆனாலும் ராஜநாயக்கரும், அவர் சகோதரர் சின்னப்பனும் அநேகரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினர். தஞ்சையிலிருந்தும், மாதேவி பட்டணத்திலிருந்தும் பலர் மனமாறினர்.

நாட்டு மருத்துவரும், பள்ளி ஆசிரியராகவும் இருந்த ஜோசப் என்பவர் சின்னையம் பாளையம் என்ற இராஜநாயக்கன் கிராமத்திற்கு உபதேசியாராக அனுப்பப்பட்டார்.

இராஜநாயக்கரும் (இராயல் நாயக்கன்), சத்திய நாதனும் உபதேசியார்களாக தஞ்சையில் பணியாற்றிய போது, சத்தியநாதன் வாயிலாக வெள்ளான இனத்தை சார்ந்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். தலித் (பறையர்) இனத்தை சார்ந்த இராஜநாயக்கன் அவர்களை இவர்கள் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இதை சரிசெய்ய 1730ல் ஆரோன் அனுப்பப்பட்டார்.

1731ல் கிறிஸ்தவ சபையார் எண்ணிக்கை 414

- தஞ்சாவூரில் - 99
- மாதேவிப்பட்டணத்தில் - 116
- மாயூரம் - 177
- மறவர் நாட்டில் - 22

1734ல் திருச்சியை நவாப் அரசர் கைப்பற்றினார். தஞ்சையிலிருந்த உபதேசியார்கள் தரங்கைக்கு சென்றனர். முதல் இந்திய ஆயர் ஆரோன் உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்ததால் ஆண்டவர் உயிர்தெழுந்த திருநாளைக் கொண்டாட இயலவில்லை. திருப்பால்துறையில் 76 கிறிஸ்தவர்கள் கூடி இராஜநாயக்கன் (இராயல்நாயக்கன்) உப்தேசியாரோடு பரிசுத்த ஆவியின் பண்டிகையை கொண்டாடினர். யுத்தத்திற்கு பயந்து தரங்கை சென்ற பலர் திருமுழுக்கு பெற்று 278 பேர்

சேர்ந்தனர்.

1737ல் பல்தாசர் கோலேப் (John Baldasar Kohlhaff) ஐயர் தஞ்சைக்கு வந்தார். தஞ்சை நகர எல்லைக்குள் 1742ல் இராஜநாயக்கன் ஆரம்பித்த பள்ளியில் ஆராதனை நடந்தேறியது. 1744ல் சுத்திரர் தெருவில் ஜெப மண்டபம் (Prayer Hall) கட்டப்பட்டது. வெள்ளாள இனத்தை சார்ந்தவர்கள் அருகிலேயே வேறு இடத்தில் வழிபட்டனர்.

ஆரோன் ஐயர் சுகவீனமானதால் இராஜநாயக்கருக்கு ஆயர் அருட்பொழிவு கொடுக்க வேண்டிய சூழ்நிலை எழுந்தது, தரங்கை அருட்பணியாளர்கள் தலித் (பறையர்) இனத்தை சார்ந்த சத்தியநாதனுக்கு ஆயர் அருட்பொழிவு கொடுக்க ஜாதி வேறுபாடு தடையாக இருந்ததை ஹாலே (Halle) முதல்வருக்கு எழுதினார். அதில் நான்கு மாவட்டத்திற்கு சிறப்பாக இராஜநாயக்கர் அருட்பணி ஆற்றுவதை பற்றியும் குறிப்பிட்டனர்.

1741ல் வெள்ளாள இனத்தைச் சார்ந்த தியாகு என்பவருக்கு அருட்பொழிவுக் கொடுத்து தஞ்சைக்கு அனுப்பினர். தஞ்சை, திருபாலத்துறை, கும்பகோணம் ஆகிய இடங்களில் 2469 பேர் கிறிஸ்துவர்களாக இருந்தனர்.

1753ல் டென்மார்க் அரசர் கேப்டன் சிவர்ஸ் (Captain Sivers) உடன், வீதெபுரோக் ஐயர் தூதுவராக தஞ்சைக்கு அனுப்பட்டார். அருட்பணி காரியங்களை குறித்து அரசரிடம் பேசினார். அதன்பின் ஜெர்மானியரான பெர்க் (Berg) வாயிலாக தஞ்சாவூருக்கும், அரண்மனைக்கும் செல்ல முடிந்தது. பெர்க் துரையின் மனைவி தரங்கையை சார்ந்தவராகையால் திருவிருத்துக் கொடுக்க தஞ்சாவூருக்கு ஐரோப்பிய குருக்கள் போய்வர வாய்ப்புக் கிடைத்தது.

1755ல் நகரத்திற்கு வெளியே ஜெபமண்டபம் (Prayer Hall) கட்டப்பட்டது. 1756ல் தஞ்சை அரசுக்கும், தரங்கை டென்மார்க் அரசுக்கும் யுத்தம்மூண்டதால் தொடர்பில் பாதிப்பு ஏற்பட்டது. யுத்தம் முடிந்தபின் 1757ல் கோலேப் ஐயரும், 1761ல் தாமே ஐயரும் தஞ்சாவூருக்கும், திருச்சிக்கும் சென்று அருட்பணியாற்றினார்.

1758ல் இராஜ நாயக்கர் கிறிஸ்தவத்தில் இருந்த ஜாதி வேறுபாடும், அதனால் ஏற்பட்ட பாதிப்பும், அருட்பொழிவிற்கு தடையான ஜாதி வெறியினாலும் வேதனைப்பட்டு அவரும், அவர் சகோதரர் சின்னப்பனும் பின் வாங்கி போனார்கள். 1758-ல் பிரென்ச் ஆக்கிரமிப்பின் போது ஜென்மானிய அதிகாரி மராட்டிய இராணுவத்திற்கு உதவினார். இராணுவம் தங்கி இருந்த பகுதிக்கு அருகே ஒரு வீட்டை கொடுத்து, அங்கே வழிபாடு நடந்தது.

1760ல் தரங்கை அருகே இருந்த மோரோவிய அருட்பணியாளர்கள் இவர்களை இன்புடன் சரிசமமாக ஏற்றுக்கொண்டு, தங்களுடன் உணவருந்தவும், தங்கவும் வைத்தனர். இதனால் இவர்களுக்கு ஈர்ப்பு ஏற்பட்டது. இருவரையும் தரங்கை அருட்பணியர் பணிநீக்கம் செய்தனர். ஆனாலும் சுவார்ட்சு ஐயர் வருவதற்கு முன்பே தஞ்சையில் கிறிஸ்தவர்களும், சிற்றாலயங்களும் இருந்தன. கன்னியாகுமரியில் (திருவிதாங்கூர்) வேதமாணிக்கம் மகாராசன் என்ற தலித் திருச்சபைக்கு வித்திட்டது போலவே, தஞ்சையில் சீர்திருத்த திருச்சபை உருவாக வித்திட்டவர் தலித் சமூகத்தை சார்ந்த இராஜநாயக்கன் மட்டுமே காரணம் ஆவார்.
மீண்டும் பணியில் சேர்ந்து அறந்தாங்கியில் பணியாற்றி,1771ல் நித்திரையடைந்தார். அவர் மனைவி தொடர்ந்து அவர் விட்டு சென்ற பணியை செய்தார். 1762ல் சுவார்ட்சு ஐயரும், கிளைன் ஐயரும் கால்நடையாக வரும் வழியிலும், தஞ்சையிலும், இந்துகளுக்கு பிரசங்கித்தும், கிறிஸ்தவர்களுக்கு புத்திமதி சொல்லிக் கொண்டும் தஞ்சாவூர் சென்றனர். பெர்க் துரை கட்டிய ஜெபவீட்டில் கிறிஸ்துவர்களை கூட்டி விசுவாசத்தை வலுப்படுத்தினர். பின் சுவார்ட்சு ஐயர் மட்டும் திருச்சி சென்று தங்கி பணியாற்றினார். திருச்சியிலிருந்து பலமுறை தஞ்சை வந்து பணியாற்றினார்.

1765/66-ல் தாமே (Dame) ஐயர் தஞ்சாவூர் சபைகளை பார்க்க வந்து, திடீரென்று நோய்வாய்ப்பட்டு மரித்தார். சுவார்ட்சு ஐயர் திருச்சியிலிருந்து வந்து அடக்கம் செய்தார்.

1769ல் சுவாஜுட்சு ஐயர் துளஜாஜீ அரசரை சந்தித்தார். சிற்றுண்டி கொடுத்த போது கடவுளுக்கு நன்றி சொல்லி சாப்பிட்டார். அரசர் கிறிஸ்தவ பாடல் பாட சொன்னபோது "என் நெஞ்சை சுவாமி உமக்கே" என்ற பாடலை பாடினார்.

1772ல் அரசரின் இராணுவத்தில் பணியாற்றிய ஐரோப்பிய அதிகாரிக்கும், பெர்க் துரையின் மகளுக்கும் (Captain Berg) திருமணம் தஞ்சை அரசரின் முன்னிலையில் நடந்தபோது திருமணத்தை நடத்தி வைத்து, சுவார்ட்சு ஐயர் அருளுரை ஆற்றினார்.

வல்லத்தில் இருந்த கோட்டையில் மேஜர் வேகன் (Vaughan) பணியாற்றிய போது அதிகாரிகளும், சிலரும் சேர்ந்து சிறிய ஆலயத்தை கட்டினர் ஆலயத்திற்குரிய வசதிகள் இல்லாவிடினும் ஐரோப்பியர்களால் தஞ்சையில் கட்டப்பட்ட ஆலயம்.

1773ல் நவாப் இடையூறால் தஞ்சை அரசர் (துளஜாஜி) பதவியிலிருந்து நீக்கப்பட்டு அரசியல் சூழல் மாறியபோது இவ்வாலயம் மருத்துவமனையாக பயன்படுத்தப்பட்டது. சுவார்ட்சு சென்னை சென்று நவாப்பிடம் போரில் சிற்றாலயம் இடிந்துவிட்டதால் தஞ்சை நகரினுள்ளே ஆலயம் கட்ட நிலம் வேண்டும் என கோரினார். சாதகமான முடிவு கிடைக்கவில்லை.

1778ல் மேஜர் ஸ்டீவன்ஸ் (Major Stevans) தன் சொந்த செலவில் மண்சுவராலும், வைக்கோல் கூரை வேயப்பட்டும் பெரிய அளவில் பெரிய கோட்டையில் இராணுவம் வழிபட வசதியாக 100 ஸ்டார் வகோடா செலவில் ஆலயம் கட்டப்பட்டது. ஹைதர் அலி அரசர் கொடுத்த பணத்தில் அனாதைகளுக்கு தஞ்சையில் ஆங்கில பள்ளியை தொடங்கினார்.

1779ல் நிரந்தரமாக ஆலயம் கட்ட நினைத்து பணம் சேகரிக்கும் முயற்சியை மேற்கொள்ளும்போது, 14 அக்டோபர் 1778ல் பாண்டிச்சேரியில் மேஜர் ஸ்டீவன்ஸ் கொல்லப்பட்டார்.

அதன்பிறகு புதிய தலைமை இராணுவ அதிகாரி (Commander in Chief) ஜெனரல் ஹெக்டர் மண்ரோ (General Hector Munro) சிறிய கோட்டை பகுதியில் ஆலயம் கட்ட இடம் கொடுத்து 9 அடி ஆழத்தில்
10 மார்ச்
1779ல்

அடிக்கல் நாட்டப்பட்டது.

சுவார்ட்சு ஐயர் கோரிக்கையின்படி சென்னை கவர்னர் சர் தாமஸ் ரம்போல்ட் (Sir Thomas Rumbold) 6,00,000 செங்கற்களும், 3000 பாரா சுண்ணாம்பும் கொடுக்க உத்தவிடப்பட்டது. 16 ஏப்ரல் 1780ல் கிறிஸ்துநாதர் ஆலயம் (Christ Church) என்று மங்கலப்படைப்பு செய்யப்பட்டது. இது சின்ன கோட்டையில் 90 அடி நீளம், 50 அடி அகலமாகவும் 500 பேர் அமர வசதியாக வெடிகுண்டு பாதுகாப்பு அமைப்புக் கொண்ட கூரையும் (Bomb Proof) திருப்பீடமும், இறுதியில் சிறிய மணியுடனும் ஐரோப்பியர்களுக்காக கட்டப்பட்டது.

மேஜர் ஸ்டீவன்ஸ் அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட ஆலய நிலம் பிராமண குடும்பத்திற்கு சொந்தமானது. அவர்கள் மீண்டும் தஞ்சை வந்தபோது இடத்தை விற்க விரும்பாததால் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. கோட்டையிலிருந்து ஒரு மைல் தொலைவில் தஞ்சை அரசர் கொடுத்த நிலத்தின் அருகே ஐரோப்பிய குடும்பம் வசித்த பங்களாவை 150 பகோடாவிற்கு திரு. ஜான் மெக்பர்ஸன் (Mr. John Macpherson) இங்கிலாந்து செல்லும் போது கொடுத்த பணத்திலும், ஜெனரல் மன்றோ கொடுத்த பணத்திலும் வாங்கினார். அது சிறிதாக இருந்ததால் ஆலயமாக மலபார் (இந்திய) கிறிஸ்தவர்கள் வழிபட வசதியாக பெரிதுப்படுத்தினார். அதை சுற்றி ஒரு பள்ளி கூடமும், உபதேசியார்களுக்கு வீடுகளும், தனக்கென்று சிறிய பங்களாவும் கட்டினார். ஆலயம் 25 டிசம்பர் 1780ல் கிறிஸ்து பிறப்பு பண்டிகையில் மங்கலப்படைப்பு செய்தார்.

1784-ல் நகர எல்லைக்கு வெளியே ஆண்டு இறுதியில் இந்திய கிறிஸ்தவர்களுக்காக ஆலயம் கட்ட முடிவெடுத்து பிகோட் பிரபு (Lord Pigot) வந்தபோது தஞ்சை அரசர் வரவேற்க போர்த்திய தங்க சரிகை சால்வையை 136 பகோடாவிற்கு விற்ற பணத்தாலும், ஜெனரல் மண்றோ உதவியாலும், கட்டின பணிக்கான பொருட்களை வாங்கினார்.

சின்னகோட்டை ஆலயத்தில் (Christ Church) 8-10 மணிவரை இராணுவ வீரர்களுக்கு ஆங்கில ஆராதனையும், 10-12 மணிவரை தோட்ட ஆலயத்தில் சுவார்ட்சு அருளுரையாற்றியும் ஆராதனை நடத்தினார். மதியம் உபதேசியார் அதே அருளுரையை திரும்ப கூறுவர். மாலை 7 மணிக்கு ஜெப கூடுகை நடத்தப்படும். 1787க்கு பிறகு அமர்சிங் அரசரானபின் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட கள்ளர் இனத்தை சேர்ந்தவர்கள் குலத் தொழிலை விட்டு விவசாயத்திற்கு வந்தனர். 1793 தங்கள் இன பற்றையும், திருமண சடங்குகளையும், பண்பாட்டையும் விட்டுவிட சிரமப்பட்டனர்.

1798ல் சுவாஜுட்சு ஐயர் மரித்து, அவர் கட்டிய தோட்ட ஆலயத்தில் அடக்கப்பண்ணப்பட்டார். 1826ல் பேராயர் ஹீபர் (Bishop Heber) வருகை புரிந்தபோது சுவர் அகலமாக இருந்ததால் வெளி புறத்திலிருந்து அழுத்தம் ஏற்பட்டு, மேற்கூரை பழுது அடைந்து இருந்தது. அதன்பின் கல்லறை தோட்ட சுற்றுசுவர் கட்டப்பட்டது. தஞ்சை அரசரின் பண உதவியால் மேற்க்கூரை பழுதுபார்க்கப்பட்டது.

1827ல் கட்டிட அமைப்பாளரான (Architect) டேனிஈ; அருட்பணியாளர் ஹேப்ரோ (Haubroe) 1830ல் அதே ஆலய இடத்தில் கூம்பு வடிவ ஓடுகளால்

வேயப்பட்டதாகவும், பக்கவாட்டில் தாள்வாரங்களோடு கட்டப்பட்டு தூய பேதுரு ஆலயம் என பெயரிடப்பட்ட ஆலயம் நிறைவடையும் வேலையில் ஹோப்ரோ ஐயர் மரணமடைந்தார். சுவார்ட்சு ஐயர் மற்ற அருட்பணியாளர்களின் கல்லறைகள் கிழக்கு புறத்தில் அமைக்கப்பட்டன. SPCK சங்கம் 2000 டாலர் பண உதவிசெய்தது. 31 ஜனவரி 1845ல் பேராயர் ஸ்பென்சர் அவர்களால் மங்களப்படைப்பு செய்யப்பட்டது.

1900ல் பெரிய அளவில் அருட்பணியாளர் W.H. பிளேக் அவர்களால் மிக பிரமாண்டமாக ஐரோப்பியர், யூரோசியர், இந்திய நண்பர்களின் உதவியாலும், SPG சங்க உதவியாலும் தற்போதைய ஆலயம் கட்டப்பட்டது.

இந்த ஆலயத்தில் மிகவும் சிறப்புப்பெற்ற அருட்பணியாளர்கள் பணியாற்றியுள்ளனர். நமதுதமிழ்வேதாகமம் இங்குதான் மொழிபெயர்க்கப்பட்டது. இங்கிருந்துதான் பல திருமண்டலங்களுக்கு நற்செய்தி விதைக்கப்பட்டது. புகழ்பெற்ற **வேதநாயக சாஸ்திரியார், ஆபிரகாம் பண்டிதர்** போன்றவர்கள் இவ்வாலத்திலிருந்து புறப்பட்ட முத்துக்கள்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

---

## அருள்திரு. எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்கள் வாழ்க்கை வரலாறு

**J.ஜான் ஞானராஜ்**
**கல்லிடை குறிச்சி**

**குடும்ப முன்னோர்**

அன்றைய திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி திருமண்டலம் (இன்றைய தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம்) கோவில்பட்டி வட்டாரத்திலுள்ள புகழ் வாய்ந்த கிராமம் ஈராச்சி, அந்த ஈராச்சி கிராமத்தில் அக்காலத்தில் எட்டாம் வகுப்பு கல்வியை நிறைவு செய்து இருந்த படித்த பண்பான பெற்றோருக்கு மகனாக முருகன் பிறந்தார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட முருகன் முத்தையா என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றார். கோவில்பட்டி வட்டாரத்தில் உள்ள துறையூர் கிராமத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் - பரமாயி தம்பதியரின் இரண்டாவது மகளான தேவகிருபை பொன்னம்மாளைத் திருமணம் செய்தார். தேவகிருபை பொன்னம்மாளின் தாயார் பரமாயி ஊத்துமலை அன்னா கூட்டம் என்ற அன்னா குடும்பத்தைச் சார்ந்த சாமுவேல் அவர்களின் உடன்பிறந்த அக்கா ஆவார். கிறிஸ்தவரான முத்தையா ஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியராகவும் உபதேசியார்

ஆகவும் பணி செய்து வந்தார். தேவகிருபை பொன்னம்மாள் ஆசிரியை பயிற்சி பெற்றவர், ஆசிரியையாக பணி செய்து வந்தார். தேவகிருபை பொன்னம்மாளுக்கு ஒரு அக்காவும் ஏழு தங்கைமார்களும் ஒரு தம்பியும் இருந்தனர். திருமணமான பின் முத்தையா உபதேசியார் - தேவ கிருபை பொன்னம்மாள் தம்பதியர் இருவரும் கோவில்பட்டி வட்டாரத்திலுள்ள ஒட்டப்பிடாரம் தாலுகாவை சேர்ந்த பசுவந்தனை என்ற கிராமத்தில் ஆசிரியர்களாக, சபை ஊழியராக சிறப்பாக ஊழியம் செய்தனர்.

**தாயாரின் பொருத்தனை**

பசுவந்தனை சபையில் முத்தையா உபதேசியார் சபை ஊழியராக அருட்பணியைச் செய்து வந்தார். இந்த பக்தி மிகுந்த தம்பதியருக்கு கிரேஸ் பாக்கியவதி என்ற மகள் பிறந்தார் அவரை எடுத்து இரண்டாவது ஒரு மகன் பிறந்தார். புத்தாண்டு ஆராதனைக்கு குடும்பமாக குடும்பத்தினர் சென்றபோது ஆராதனை நிறைவடையும் வேளையில் குழந்தை நன்கு தூங்கி விட்டது. ஆராதனை நிறைவில் நிறைவு ஜெபம் இறையாசி கூறி முடிந்ததும் தேவாலயத்தின் முன் வெடிகள் முழங்கின அந்த வெடிகளில் ஒரு கல்வெடி தேவாலயத்தின் தூண் பக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்த உபதேசியாரின் குழந்தை அருகில் வெடித்ததில் அந்த குழந்தை மரணம் அடைந்தது. ஊரே அழுதது, சபையார் துக்கத்தில் ஆழ்ந்தனர். அனைவரும் ஆண்டவரிடம் அழுது ஜெபித்தார்கள் தங்களுடைய உபதேசியாரின் மகனுடைய திடீர் மரணம் அனைவரையும் துக்கத்தில் மூழ்க வைத்தது. அந்த நேரத்தில் தேவ கிருபை பொன்னம்மாள் ஆண்டவரை நோக்கி 'ஆண்டவரே நீர் மீண்டும் ஒரு மகனை எனக்கு தந்தால் அவனை இயேசுவே உமக்காக வளர்த்து அவனை ஊழியம் செய்ய அனுப்புவேன்' என்று பொருத்தனை செய்து ஊக்கமாக ஜெபித்தார்கள்.

அருள்திரு ஜேசுதாசன் ஐயரவர்களின் பிறப்பு ஆண்டவர் அந்த தாயார் தேவகிருபை பொன்னம்மாள் மனமுருகி செய்த பொருத்தனை ஜெபத்தை, மன்றாட்டைக் கேட்டு மகன் ஒருவரை அந்த தம்பதியருக்கு கொடுத்தார் அவரே இந்த வாழ்க்கை வரலாற்றின் கதாநாயகரும் பிற்காலத்தில் எம்.எஸ்.ஜே என அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட குருவானவர் அருள்திரு .எம்.எஸ். ஜேசுதாசன் ஆவார்..06.08.1917 இல் முத்தையா உபதேசியார் - தேவகிருபை பொன்னம்மாள் தம்பதியரின் மூன்றாவது குழந்தையாக M.சாமுவேல் ஜேசுதாசன் அவர்கள் பிறந்தார்கள்.

**கல்வி**

அருள்திரு .எம்.எஸ். ஜேசுதாசன் ஐயரவர்கள் தொடக்கக் கல்வியை பசுவந்தனை சி.எம்.எஸ் தொடக்கப் பள்ளியிலும் நடுநிலைக் கல்வியை பாளையங்கோட்டை சி.எம்.எஸ் நடுநிலைப் பள்ளியிலும் உயர்நிலைக் கல்வியை தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியிலும் கற்றுத்தேர்ந்தார்.

**தனித்திறமைகள்**

கல்வி கற்பதில் ஆர்வமும் நன்கு படிக்க வேண்டும் என்ற துடிப்பும், வேடிக்கையாக நகைச்சுவையாக பேசும் திறமையும் நாடகம் நடிப்பதில் திறமையும் பாடல் இயற்றும் திறமையும் பாடலுக்கு மெட்டமைத்து இசை அமைக்கும் திறனும் ஆர்மோனியம், வயலின், மவுத் ஆர்கன் ஆகிய இசைக்கருவிகளை இசைக்கும் திறனும் இயற்கையிலேயே கனம். ஜேசுதாசன் ஐயரவர்களுக்கு இருந்தது. கல்வி பயிலும் காலத்திலேயே உடற்பயிற்சியால் கட்டுக்கோப்பான உடலை பெற்றிருந்தார்கள்.

**தாயாரின் பொருத்தனைக்கு கீழ்ப்படிந்த தேவதாசன்**

நல்ல உயரமும் உடற்பாங்கும் கொண்டிருந்தமையால் காவல்துறை உதவி ஆய்வாளர் வேலைக்கு விண்ணப்பித்தார்கள். LMP எனும் மருத்துவ படிப்புக்கும் ஐயரவர்கள் விண்ணப்பித்தார்கள் ஆனாலும் தாயார் தான் பிறப்பதற்கு முன்பு பொருத்தனை செய்து ஜெபித்த ஜெபம் ஜேசுதாஸ்ஐயரவர்களிடம்அடிக்கடிநினைவில் வந்தது. பொருத்தனை செய்து ஜெபித்த தாயார் தேவகிருபை பொன்னம்மாளும் 'மகனே நீ கடவுளுக்குத்தான் ஊழியம் செய்யவேண்டும்' என அடிக்கடி உறுதியாய் எடுத்துக் கூறினார்கள் ஆதலால் ஊழியத்திற்கு ஏற்றதாயிருக்கும் என்பதற்காக ஆசிரியர் பணியைச் செய்ய விரும்பி ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கு விண்ணப்பித்தார்கள். ஆசிரியர் பயிற்சி பெறும் முன்பாகவே பாண்டவர்மங்கலம் ஒரிஜினல் பாண்டிய நாடார் பள்ளியில் ஆசிரியராக பணி செய்யும் வாய்ப்பு ஜேசுதாசன் ஐயவர்களுக்கு கிடைத்தது. கல்வி கற்பிக்கும் கலையில் கனம். ஐயரவர்கள் தலைசிறந்து விளங்கினார்கள். பாண்டவர் மங்கலம் பள்ளியை தணிக்கை செய்து ஆய்வு செய்த கல்வித்துறை அதிகாரிகள் தமது தணிக்கை அறிக்கையில் 'ஆசிரியர் பயிற்சியை பெறாத வாலிபர் ஒருவர் இங்கு ஆசிரியராக மிகச் சிறப்பாக பணி செய்கிறார் இந்த பள்ளியின் வளர்ச்சி பிரகாசமாக உள்ளது' என குறிப்பு எழுதி சென்றமையால் பள்ளி நிர்வாகம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தது.



**ஆசிரியர் பயிற்சி பள்ளி மாணவர் ஜேசுதாசன்**

பாளையங்கோட்டை பிஷப் சார்ஜென்ட் ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கு ஆசிரியர் பயிற்சியை பெற வேண்டி மனு செய்த ஜேசுதாசன் அவர்களுக்கு படிப்பதற்கு இடம் கிடைத்தது 1937 முதல் 1939 வரை இரண்டு ஆண்டுகள் அங்கு கல்வி கற்று தேர்ச்சி பெற்றார்கள். ஜேசுதாசன் அவர்களின் ஆற்றலையும் ஒழுக்கத்தையும் போதக சமர்த்தத்தையும் கண்ட ஆசிரியர் பயிற்சி பள்ளி முதல்வர் அருள்திரு. சத்தியசாமுவேல் அவர்கள் அவர் ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த உடன் தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக உடனடி பணி நியமனத்தை செய்து கொடுத்தார்கள்.

**திருமணம்**

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் மெத்தடிஸ்ட் திருச்சபையில் அருள்திரு. ஜெபமணி டேவிட் ஐயர் அவர்கள் குருவானவராகப் பணி செய்து வந்தார்கள். அருள்திரு. ஜெபமணி டேவிட் ஐயரவர்களின் தந்தை திரு.தாவீது பாக்கியநாதன் அவர்களால்

'இந்த குழந்தையை ஏற்றுக்கொள்ளும்'

'இம்மனர்க்கும் அருள் ஈ பரவாசா'

'இயேசு கிறிஸ்து நாதர் எல்லாருக்கும் இரட்சகர்' 'எப்போ காண்பேனோ எப்போ சேர்வேனோ' போன்ற பல கீர்த்தனைபாடல்கள் இயற்றப்பட்டது.

திரு.தாவீது பாக்கியநாதன் அவர்களின் பேத்தியும் அருள்திரு .தா.ஜெபமணி டேவிட் ஐயரவர்களின் மகளுமான சுகிர்தம் அவர்களை எம்.எஸ். ஜேசுதாசன் அவர்கள் திருமணம் செய்தார்கள். பாடல் இயற்றி இசை அமைக்கும் திறன் கொண்ட எம்.எஸ்.ஜேசுதாசன் அவர்களுக்கு முக்கியமான பாடலாசிரியர் ஒருவரின் பேத்தியே மணப்பெண்ணாக அமைந்தது மகிழ்ச்சிக்குரியதாயிருந்தது.

**தொடரும் ...**

# விக்டோரியா மகளிர் மேல்நிலைப்பள்ளி வரலாறு

அருள்திரு. இரா. சாமுவேல் ஜெயசீலன்,
கீதாநகர்

1881-ம் ஆண்டு பேராயர் கால்டுவெல் ஐயரவர்கள் தம் துணைவியார் திருமதி. எலைசா கால்டுவெல் அம்மையாருடன் இடையன்குடியில் இருந்து தூத்துக்குடிக்கு மாறி வந்தார். இந்தியாவில் கடந்த 43 ஆண்டு நற்பணியின் காரணமாக நல்ல அனுபவத்தினை பெற்றிருந்த கால்டுவெல் ஐயர் இடையன்குடியில் தனது துணைவியாரையும் கல்விப் பணியில் ஈடுபடச் செய்ததன் மூலம் அவர்கள் தூத்துக்குடி வந்த உடன் பெண்கள் கல்வியில் ஆர்வம் கொண்டு 1883-ம் ஆண்டில் தூத்துக்குடி மேலூரில் 23 மாணவியருடனும், கீழுரில் 24 மாணவிகளுமாக இரு மகளிர் பகல் பள்ளிகளை (Day Girls Schools) ஆரம்பித்தார். இந்த 47 மாணவிகளில் 25 பேர் திருமணமானவர்கள். 1884-ம் ஆண்டில் மூன்றாவதாக வடக்கூரிலும் ஒரு பள்ளியை துவக்கினார். இந்த மூன்று பள்ளிகளில் மேலூரில் அமைந்த பள்ளியே மிகவும் சிறப்பாகச் செயல்பட்டமையால் அதனை நன்கு பராமரித்து மென்மேலும் அதன் வளர்ச்சியில் நாட்டம் கொண்டார்.




தற்சமயம் பள்ளி இயங்கி வரும் இடத்தில் ஒன்றரை ஏக்கர் நிலப் பரப்பினை S.P.G. மிஷனெரியான கனம் ஆடம்சன் ஐயர் அவர்கள் வாங்கி அதில் மாணவிகளுக்கென்று தனியாக ஒரு சாதாரண ஆசிரிய பயிற்சிப் பள்ளியை (Normal School for Teacher Training) ஆரம்பிக்கச் சொன்னார். பள்ளிக் கட்டடம் 1887-ம் ஆண்டு கட்டி முடிவுற்றது. அதே வருடத்தில் விக்டோரியா மகாராணி ஆட்சியின் பொன்விழா கொண்டாடி கொண்டிருந்த சமயமாதலால், பேராயர் கால்டுவெல் அவர்கள் இப்பள்ளிக்கு விக்டோரியாவின் பெயரை சூட்டினார். அச்சமயம் இந்தியா - இலங்கை நாடுகளுக்கு மெட்ரோபாலிடனாக இருந்த பேரருள் பெருந்திரு. ஜாண்சன் அவர்கள் தென்னிந்திய சுற்று பயணத்தை மேற்கொண்டு வருங்கால் அவரை அழைத்து அவர் தலைமையில் 1887-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் நாள் இப்பள்ளி புதிய கட்டிடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவ்விழாவிற்கு 657 கிறிஸ்தவர்களும், 700 கிறிஸ்தவரல்லாதாருமாக அநேக அரசாங்க அதிகாரிகளும் 240 சிறுபிள்ளைகளும் கூடியிருந்து அவ்விழாவினைச் சிறப்பித்தார்கள். அப்பொழுது பள்ளியில் மாணவிகளின் எண்ணிக்கை 11 ஆக இருந்தது.

அடுத்த 8 ஆண்டுகளில், அதாவது 1895-ம் ஆண்டில், சாதாரண ஆசிரியப் பயிற்சி பள்ளி நாசரேத் ஊருக்கு மாற்றப்பட்டு, இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. அந்த காலத்தில் பெண்கல்வி பல உள்ளூர் பெரிய மனிதர்களால் பரிகசிக்கப்பட்டும், கேவலமாக மதித்ததின் பயனாக மீண்டும் நடுநிலைப்பள்ளியாக மாறியது. ஆனால் 1906-ம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாவதாக சரிகைப் பின்னல் (Lace Making) கைத்தொழில் இப்பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டது. 1910-ம் ஆண்டு உயர் ஆரம்பப் பள்ளியாக மாறியது. 40 ஆண்டுகளாக S.P.G. மிஷனெரிகளின் மேற்பார்வையில் இயங்கிய இப்பள்ளி 1927-ம் ஆண்டு முதல் தூத்துக்குடி சர்க்கிள் கமிட்டியின் கீழ் இயங்கத் தொடங்கியது. சர்க்கிள் சேர்மன் இப்பள்ளியின் மேலாளராகப் பதவியேற்றார்.

1930-ம் ஆண்டு வரை திரு. நியூமன் அவர்களின் தலைமையில் இருந்து வந்த இப்பள்ளிக்கு குமாரி இராஜம்மாள் ஜேக்கப் அவர்கள் முதல் பெண் தலைமை ஆசிரியையாக பதவியேற்று இரண்டு வருடங்கள் பணியாற்றினார்கள். 1932-ல் இருந்து வயனா பிலிப் அம்மையார் 1952-ம் ஆண்டு வரை 20 வருடங்கள் இப்பள்ளியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தார். இவர்கள் காலத்தில் தான் இப்பள்ளி 1937-ம் ஆண்டு பொன்விழா கொண்டாடியது. அச்சமயம் 350 மாணவிகளுக்கு 11 ஆசிரியைகள் பாடம் பயிற்றுவித்தனர். அந்த 11 பேரும் மணமாகாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 63 மாணவிகள் விடுதியில் தங்கி படித்தனர். அந்தக் காலத்திலேயே அரசாங்கம் நடத்திய பரீட்சைகளில் இருமுறை தங்கப்பதக்கம் பெற்றனர். மேலும் இரு குழுமங்கள் கொண்ட சாரணிய இயக்கமும், நீலப்பறவை இயக்கமும் செயல்பட்டு வந்தன. குமாரி லூசி E. வெஸ்டர்ன் அம்மையாரால் மாணவிகளுக்கு சமையல் கற்றுக் கொடுக்க

ஒரு சிறு கட்டிடமும், புனித பிரிஸ்கா சிற்றாலயமும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஒவ்வொரு செவ்வாய்கிழமைகளிலும் நற்கருணை ஆராதனை நடைபெற்றது.

1952-ம் ஆண்டு குமாரி அன்னபூரணம் சாலமன் அம்மையார் தலைமை ஆசிரியரானார்கள். 1953-ல் நான்காம் படிவமும், 1954-ல் ஐந்தாம் படிவமும், 1955-ல் ஆறாம் படிவத்தோடு உயர்நிலைப்பள்ளியாக மாறியது. 1956-ல் முதன் முதலில் 50 மாணவிகள் எஸ்.எஸ்.எல்.சி. அரசாங்கத் தேர்வு எழுதினர். அதில் ஒரு மாணவியே வெற்றி பெற்றார். அதே ஆண்டில் திருமதி. ஆனி பாண்டியன் தலைமை ஆசிரியையாக பதவி ஏற்று பள்ளியின் பெயரையும், படிப்பின் தரத்தையும் உயர்த்தினார்கள். அவர்களின் 13 ஆண்டு சேவை பள்ளியின் சரித்திரத்தையே மாற்றி விட்டது. பின்பு குமாரி குளோரி தாமஸ் இரு ஆண்டுகளும், குமாரி கான்ஸ்டன்ஸ் தேவ வரம் அவர்கள் இரு ஆண்டுகளும் பள்ளியை நன்கு வளரச் செய்தனர். 1973-ம் ஆண்டு முதல் தலைமை ஆசிரியையாக பணியாற்றிய திருமதி. விமலா பாண்டியராஜ் அம்மையார் 12 ஆண்டுகள் தமது அயராத உழைப்பினால் பள்ளிக்கு 8 வகுப்பறைகள் கொண்ட ஒரு பெரிய கட்டிடத்தை கட்டி முடித்தார்கள். 1978-ம் ஆண்டு இப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக உயர்வு பெற்றது. 1985-ல் திருமதி. அலெக்ஸ் சாமுவேல் அம்மையார் பதவி ஏற்று 4 ஆண்டுகளில் பள்ளியின் கல்வி தரத்தை நன்கு உயர்த்தினார்கள். 1989-ல் தலைமை ஆசிரியையாக பதவி ஏற்ற திருமதி. கிரீடா ஐசக் அவர்கள் ஆறு ஆண்டுகளுக்குள் மூன்று பெரிய கட்டடங்களைக் கட்டி முடித்துள்ளார். மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு சோதனைக்கூடங்களும், நவீன வசதியுடன் கட்டித் தரப்பட்டது. 5 கம்ப்யூட்டர்களுடன் குளிர்சாதன வசதியுடன் கூடிய கம்ப்யூட்டர் அறை அமைக்கப்பட்டு 11-ம் வகுப்பில் கம்ப்யூட்டர் கல்வி 1993-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை விடுதி வசதி இல்லாதிருந்த இப்பள்ளியில் 200-க்கும் அதிகமான மாணவியர் தங்கிப் படிக்கும் விக்டோரியா விடுதி 25.03.1995-ல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அரசாங்கத் தேர்வுகளில் 98%, 99% என தொடர்ச்சியாக மாநில ராங்குகளுடன் மாணவியர் தேர்ச்சி பெறுவது இப்பள்ளியின் சிறப்பாகும். 92-ம் ஆண்டு நூற்றாண்டு கட்டடம் கட்டப்பட்டது. 93-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருமதி. எலிசா கால்டுவெல் வளாக கட்டடமும் கட்டப்பட்டது. 98-ம் ஆண்டு ஜூன் முதல் 2003-ம் ஆண்டு வரை திருமதி. டல்சி கோயில்ராஜ் அவர்கள் தலைமையாசிரியையாக இருந்து 12 வகுப்பறைகள் கட்டினார்கள். 2003 ஜூன் முதல் 2009 மே மாதம் வரை திருமதி. செலின் புனிதா தேவி அவர்கள் தலைமையாசிரியையாக சிறப்பாக பணி செய்தார்கள். கம்ப்யூட்டர் ஆய்வுக்கூடம், தாவரவியல், விலங்கியல் ஆய்வுக்கூடம், தலைமையாசிரியர் இல்லம் நான்கு வகுப்பறைகள் புதிதாக கட்டினார்கள். திருமதி. ஜெயா பால் (2009 - 2014) அவர்கள் தலைமையாசிரியையாக இருந்தார்கள். தற்பொழுது 2014 முதல் திருமதி. P. அருள்ஜோதி கிருபா தலைமை ஆசிரியையாக சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அலுவலகத்தையும் ஒரு கட்டிடத்தையும் புதுப்பித்து இருக்கிறார்கள். 1887-ல் 11 மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளியில் தற்சமயம் 3000 மாணவிகள் கல்வி பயில்கின்றனர்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

## என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன்



‘என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன் ஏற்றுக்கொள்ளும் இயேசுவே‘ என்ற கிறிஸ்தவ கீர்த்தனை பல திருச்சபைகளில் பாடப்படுகிறது பொறையார் லூத்தரன் திருச்சபையில் திடப்படுத்துதல் ஆராதனையில் இந்த பாடல் பாடப்படுகிறது இதன் வரலாறு என்னவென்றால் மதுரையை தலை நகராக வைத்து சுவிஷேசம் அறிவிக்க வந்த அமெரிக்க நாட்டு மிஷனரிகள் L.P.N. எனும் பள்ளியை ஆரம்பத்தில் கீழவாசலிலும் பின்னர் இரட்சண்ய புரத்திலும் அமைத்தனர் ஏழை சிறுமிகளுக்கு இறையியலும் கல்வியும் தொழிற்பயிற்சியும் இலவசமாக கற்றுத் தரப்பட்டது Bird's nest என்ற இலவச விடுதியையும் நடத்தினர். இதற்கு பொறுப்பாக அருள்திரு சீமோன் எனும் இந்திய குருவானவரை நியமித்தனர் கீர்த்தனைகள் சங்கீதம் வேதம் ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்த சீமோன் ஐயரவர்களை ஒரு தகப்பனாராகவே மாணவிகள் பாவித்தனர் 19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் கடைசி ஆண்டை முடித்து வெளியேறும் மாணவிகள் தங்கள் வளர்ப்பு தந்தையை விட்டு பிரிய மனமில்லாமல் கலங்கிய போது ஐயரவர்கள் இயேசுவுக்கே நாம் சொந்தம் கலங்க வேண்டாம் என்று கூறி இந்த கீர்த்தனையை இயற்றி மாணவிகளை பாடச்செய்தார் பின்னர் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பிரிவு உபச்சார பாடலாகவே இருந்தது இன்று பிரபலமாகி அனைத்து சீர்திருத்தசபைகளிலும் பாடப்படுகிறது. சொந்த ரத்தக் கிரயத்தால் என்னை மீட்ட எந்தையே உந்தனுக்கிதோ படைக்கிறேன் என்று பாடும்போது ஒரு மாணவி உணர்ச்சிவசப்பட்டு மயங்கி விழுந்தாராம். அப்படிப்பட்ட அருமையான கீர்த்தனை இது.

பத்மராஜன்

# அருட்திரு.காரள் மொரிக்கே

## 1822 – 1866

நீலகிரி மாவட்டத்தில் பாசல் அருட்பணி சங்கத்தின்(Basel Missionary Society) படுக(Baduga)பணித்தளத்தின் முன்னோடி அருட்பணியாளர்களுள் முக்கியமானவர் அருட்திரு காரள் மொரிக்கே அவர்கள். இவர் ஜெர்மனியில் உள்ள ஸ்ட்டுட்கார்டில் 1822ஆம் ஆண்டு பிபரவரியில் பிறந்தார், இவர் தம் இளமையில் தமது சொந்த ஊரில் கல்வி முடித்து, டியூபிங்கின் பல்கலைக்கழகத்தில் பல்கலைப் படிப்பு முடித்து பாசல் அருட்பணியில் இணைந்து 1844ஆம் ஆண்டு தமது 22வது வயதில் அந்நாட்களைய கடினமன கப்பல் பயணத்தை மேற்கொண்டு, ஜெர்மனியிலிருந்து இந்தியாவின் இன்றைய கர்நாடக மாநிலத்தின் மங்களூர் துறைமுகம் வந்துச் சேர்ந்தார்.சில நாள்கள் மங்களூரிலும், தார்வாட் பாசல் பணித்தளங்களில் அருட்பணியாற்றியப் பின்னர் நீலகிரியில் கேத்தியை மையமாகக் கொண்டு படுகர் இன மக்கள் மத்தியில் தொடங்கப்பட்ட அருட்பணியில் இணைந்தார், இவர் நீலகிரி மலையில் வாழும்படுகர் இன மக்களின் மொழியான படுகு(Badugu) மொழியை மிக சிறப்புடன் கற்று நீலகிரியின் கரடு முரடான மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மேலும் கீழுமாக படுகர்களின் ஹட்டிகளில் (கிராமங்களில்)மழையென்றும் வெயிலென்றும் பனியென்றும் காற்றென்று பாராமல் அல்லும் பகலுமாய் சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டவருக்காக அருட்பணியாற்றினார்.

இவர் படுக மக்களின் வரி வடிவம் இல்லாத படுகு(Badugu) மொழியில் உள்ள'தொட்டவக்கர சுலோக' என்ற பழமொழிகள் அல்லது நீதி மொழிகளையும் (Proverbes), கதைப்பாடல்களையும்(Balled) கேட்டு அவற்றிலிருந்த இலக்கியச் செழிப்பை கண்டு வியப்பில் மூழ்கினவராய் அவற்றைத் தொகுத்து ஜெர்மன் மொழியில் சொல்பெயரப்பும், மொழிப் பெயர்ப்பும் செய்து அச்சிட்டு வெளியிட்டார்.இதன் மூலம் நீலகிரி படுகர்கள் பேசும் படுகு மொழியின் புகழை உலகறியச் செய்தா முன்னோடிகளில் ஒருவர். மேலும், படுகர்களின் அப்போஸ்தலர், மேநாள் சென்னை உயர் நீதி மன்ற நீதி அரசர் மேதகு ஜாரஜ் ஜேம்ஸ் காசாமேஜர் (Honourable. George James Casamajor)அவர்களுக்கு உதவியாக திரு கொல்லக் கொங்கா அவர்களுடன் இணைந்து தூய லூக்கா நற்செய்தி நூலினை படுகு மொழியில் மொழிப் பெயர்க்கவும், பின் அதனை அச்சேற்றவும் அரும்பாடுப்பட்டார். (மேதகு ஜாரஜ் ஜேம்ஸ் காசாமேஜர் அவர்கள் தூய லூக்கா நற்செய்தி நூலில் எட்டு அதிகாரங்களை மட்டுமே மொழிபெயர்த்தார். இதற்கிடையில் அவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து மீதமுள்ள பகுதிகளை கார்ள் மொரிக்கே அவர்களே மொழிப்பெயர்தார்கள்.) அருட்திரு காரள் மொரிக்கே அவர்கள் 1852ஆம் ஆண்டு தூய லூக்கா நற்செய்தி நூலினை தமது கைகாளாலேயே அச்சுக் கோர்த்து அச்சிட்டார் என்பது சிறப்புடன் நோக்கத்தக்கது.

அருட்திரு காரள் மொரிக்கே அவர்கள் நீலகிரியில் அந்நாட்களில் இயங்கிவந்த அனைத்து பாசல் பள்ளிகளையும் மேற்பார்வைச் செய்து வந்தார், படுக சமுதாயத்தின் முதல் கிறிஸ்தவரான ஆபிரகாம் ஹாலய்யா அவர்கள் 1858ஆம் ஆண்டு கிறிஸ்தவராவதற்கு பெரும் பங்காற்றினார். அவரது மனமாற்றத்திற்கும், திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் இணைந்து பிற்காலத்தில் படுக திருச்சபையில் முதல் நற்செய்தியாளராக (உபதேசியாக) மாற உற்றத் துணையாக இருந்தார்.



அந்நாட்களில் அவருக்கிருந்த பணிச்சுமை மற்றும் உடல் நலம் குறைவு போன்றவைகளினால் தாம் அருட்பணியில் அதிகம் நேசித்த படுக இன மக்களையும் நீலகிரி மலையையும் விட்டு, இருபத்திரண்டாண்டுக் கால கடின உழைப்பிற்குப் பின்னர் 1865ஆம் ஆண்டு இறுதியில் விருப்பு ஓய்வுப் பெற்று தம் தாயகமான ஜெர்மன் ஸ்டுட்கார்ட் நகருக்குச் சென்று, 1866ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் நாள் தமது 44வது வயதில் தம் பரம வீட்டிற்கு நித்திய இளைப்பாறுதலுக்குள் கடந்துச் சென்றார்.

அருட்திரு.பேராசிரியர். மா. தேவராஜ்
நீலகிரி

கடந்து வந்த பாதைகளை அடுத்த தலைமுறைக்கு சேர்ப்பத்தின் பலன் அவர்களுக்கு(தற்கால &எதிர்கால) தலைமுறையினர்க்கு பொறுப்பும் ஏற்படும்.

- Arun Amalraj

**இலவச ஆலோசனைக்கு**

ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பாரம்பரிய மிஷன் சொத்துக்கள், மிஷனரிகளின் சொத்துக்களை மீட்க தமிழகம் முழுவதும் சட்ட வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனைக்கு
டாக்டர். கிங் பால்,
சென்னை
+91 97905 91747

# கீர்த்தனை கவிஞர் வே . ஜே . பென்யமீன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

ஆல்வின் சிரோன்மணி

ஒரே குடும்பத்தில் பிறந்த மூன்று சகோதரர்கள் ஆசிரியர்களாக, அல்லது மருத்துவர்களாக, அல்லது வியாபாரம் செய்பவர்களாக இருப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால் மூன்று சகோதரர்களும், போதகப் பணியில் ஈடுபட்டவர்களாக இருப்பதைக் காண்பது அரிது. நம்முடைய கிறிஸ்தவ கீர்த்தனைகள் நூலில் மூன்று போதகச் சகோதரர்களின் அருமையான பாடல்கள் இடம் பெற்றிருப்பதை நம்மில் பலர் அறிந்திருக்கலாம். மதுரை அருகில் உள்ள வத்தலக்குண்டுவை அடுத்த சிலுக்குவார்பட்டி என்னும் சிற்றூரைச் சேர்ந்த இந்த மூன்று சகோதரர்களும் கத்தோலிக்கப் பின்னணியைக் கொண்டவர்கள். மூவரும் பசுமலை, மதுரை போன்ற இடங்களில் கல்வி பயின்றும் திருச்சபையின் பல்வகைப்பட்ட பணிகளில் ஈடுபட்டும் இளமைக் காலத்திலேயே நற்பெயர் எடுத்துப் போதகப் பணிக்கென்று தங்களை அர்ப்பணித்துக்கொண்டு பயிற்சிகளை முடித்து அபிஷேகம் பெற்று மதுரை அமெரிக்கன் மிஷன் பகுதிகளில் பணியாற்றத் துவங்கி பின்னர் வேறு இடங்களில் ஊழியங்கள் செய்திருக்கிறார்கள். இந்தச் சகோதரர்களுள் மூத்தவர் மாசிலாமணி ஐயர், அடுத்தவர் சந்தியாகு ஐயர், அவர்கள் இருவருக்கும் இளையவர் பென்யமீன் ஐயர். ஒருமுறை திண்டுக்கல்லில் அவருடைய அருமைப் புதல்வியைச் சந்திக்க நேர்ந்தபோது தம் தகப்பனாரைப் பற்றிய சில குறிப்புக்களை நினைவு வழியே தோண்டி எடுத்து வழங்கினார்கள். அவர் மாசிலாமணியைப் தம்முடைய போலவே மதுரையை விட்டு வடக்கே திருவண்ணாமலைக்கு வந்து ஆற்காடு லூத்தரன் திருச்சபையில் பணியாற்றத் துவங்கிய காலத்தில் பலப்பல இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளதை ஒருவாறு அறிந்து கொண்டேன். உற்ற நண்பர்களாக இருந்த ஓரிரு கிராம ஆசிரியர்களும், உபதேசிமார்களும் அவருடைய நற்செய்திப் பணிகளில் அவருக்குத் துணை புரிந்திருக்கிறார்கள். அக்காலத்துப் போதகர்கள் சிறந்த அருளுரையாளர்களாகவும், நிர்வாகத் திறமை படைத்தவர்களாகவும் மட்டும் இருந்துவிட்டால் அவர்கள் பணி ஆக்கம் பெறமுடியாது. அவர்கள் பாடல் வரம் பெற்றவர்களாகவும் இருந்தாக வேண்டும். அப்போதுதான் பேயரளவில் அவர்கள் பணி விரிவாக்கம் பெறமுடியும். பென்யமீன் ஐயர் தம்முடைய அண்ணன்மார்களைப் போலவே சிறந்த கவிஞராகவும் பாடகராகவும் விளங்கியிருக்கிறார். தாம் பணியாற்றிய சிறு சிறு சபைகளில் பயன்படுத்துவதற்காக அவர் பல பாடல்களைப் புனைந்துள்ளதாகத் தெரிய வருகிறது. கிறிஸ்தவ கீர்த்தனைகள் நூலுக்குப் பாடல்கள் திரட்டப்பட்டபோது ஆற்காடு லூத்தரன் திருச்சபையில் மிஷனரிமார் மூலமாக இவருடைய ஒரு பாடல்கள் மட்டுமே கிடைப்பதாயிற்று. அந்தப் பாடல் நாம் பெரிதும் பயன்படுத்துகின்ற ஓர் உணர்ச்சிப் பாடலாகும் . உன்னையன்றி வேறே கதி ஒருவர் இல்லையே ஸ்வாமி ' என்று ஆரம்பமாகும் இப்பாடல் கவிஞரின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் அறிக்கை உணர்வையும், அடைக்கல நாட்டத்தையும் எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டுமானால் அதன் அனுபல்லவியையும், அடிகளையும் ஊன்றிப் படிக்க உணர்ச்சியோடு பாடிப் பார்க்க வேண்டும்.

அனுபல்லவியில் கவிஞர் ஆண்டவரின் துணைக்கும், மற்றவர்களின் துணைக்கும் இடையே ஒரு வேறுபாட்டைக் காண்கிறார், ஆண்டவர் இம்மானுவேலர் நம்மோடிருக்கும் இறைவன் என்பதை உணர்ந்தவராய், அவரை மனுவேலா ( இம்மாறுவேலே என்பதன் தமிழ் வடிவம் ) என்று அழைக்கிறார் . அன்னை, தந்தை, உற்றார், சுற்றார் எவரின் துணையும் இம்மானுவேலரின் அருந்துணைக்கு ஈடாகமுடியாது என்பதை அழுத்தமாகக் கூறிக் காட்டுகிறார். இம்மானுவேலரை அதிசய மனுவேலர் ' , ' என் இயேசு ஸ்வாமி ' , ஆசை என் இயேசு சுவாமி ' என்று நெஞ்சின் ஒலிகளால் போற்றிப் பாடுகிறார் . இப்பாடலின் அடிகளில் தம்மைத் துரோகி , பாதகம் புரிந்தவன் , இறைவனின் திருவடியைக் காணத் தகுதியற்றவன் , கடையன் , வஞ்சகன் , பாவி , தோஷி , பித்தன் , பேதை , கள்ளன் , கபடன் , கர்ம சண்டாளன் என்று 12 சொற்களாலும், தொடர்களாலும் குறிப்பிடும் இக்கவிஞர் ஆண்டவரிடம் உரிமையோடு தம்முடைய வேண்டுதலை ஏறெடுக்கிறார். கடையனாகிய நான் மடிவதற்கு முன்பு எனக்கு நீர் அருள் புரியவேண்டும் என்றும் , என் அருகில் வந்து அருள் கூர்ந்திட வேண்டும் என்றும் என்னைக் கடைத்தேற்றிப் பிழைக்கவைக்க வேண்டும் என்றும், என் உள்ளம் கரைந்து உருகும்படி செய்திட வேண்டும் என்றும் வேண்டுகிறார் . அந்தத் தொடர்களைப் படித்துப் பாடிப் பாருங்கள்:

கடையனுக்கருள்புரி - மடியுமுன் யேசு ஸ்வாமி !
கிட்டி என்னிடம் சேர்ந்து கிருபைவை யேசு ஸ்வாமி !
பேதையைக் கடைத்தேற்றிப் பிழைக்கவை யேசு ஸ்வாமி !
உள்ளமுங்கரைந்தே உன்றன் - உயர் சிலுவையினன் பால்
உலையிலிட்ட மெழுகாய் உருகவை யேசு ஸ்வாமி !

இந்தப் பாடல் ஓர் உணர்ச்சிப் பாடல் என்று குறிப்பிட்டேன் . கடவுளின் சன்னிதியில் நிற்கும் போது பாவ உணர்ச்சியைத் தவிர வேறெந்த உணர்ச்சிக்கும் இடம் என்பதை இப்பாடலைப் பாடும் போது நாம் தெரிந்துகொள்ள பாவ உணர்ச்சிப் பாடலின் மூலமாகப் பாவ அறிக்கை செய்யும் போது இறைவனின் அன்பை நினைந்து அவர் அருளுக்காய் வேண்டி மன்றாடும்போது ஒருவகையான பரவச உணர்ச்சி- பாவம் மன்னிக்கப் பெற்ற நிச்சயத்தையும் , மகிழ்ச்சியையும் தரும் உணர்ச்சி ஏற்படவே செய்கிறது.

> Its very useful for the youth today to know about the history.Good, work
>
> - Esther Rajathi

# திருமறையிலும் திருச்சபை வரலாற்றிலும் தலைமைத்துவம்

J ஜான் ஞானராஜ்
கல்லிடைக்குறிச்சி

### பழைய ஏற்பாட்டில் தலைமைத்துவம்

ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, யோசுவா, சாமுவேல், தாவீது, செருபாபேல், எஸ்ரா, நெகேமியா, மோர்தேக்காய், தானியேல், தெபோராள், எஸ்தர் ஆகியோர் சிறந்த தலைமைத்துவ பண்பை தமது வாழ்வில் வெளிப்படுத்துவதை பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம்.

### புதிய ஏற்பாட்டில் தலைமைத்துவம்

புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிறந்த ஆளுமைத் திறன் கொண்ட தலைமைத்துவ நிபுணராக செயல்படுவதை நாம் காணலாம். அவரே தலைமைத்துவத்திற்கு சிறந்த முன்மாதிரி.

### திருச்சபை வரலாற்றில் தலைமைத்துவம்

முதலாம் நூற்றாண்டு (தொடக்க கால) திருச்சபையில் தலைமைத்துவம்

கிறிஸ்தவ சபை வரலாற்றில் முதலாம் நூற்றாண்டில் தொடக்கத்தில் எருசலேம் பேராயரும் (யாக்கோபு), அந்தியோகியா பேராயரும் (பேதுரு, இயோதியு, இக்னேஷியஸ்) உலகளாவிய திருச்சபைக்கு தலைமை தாங்கினார்கள். அன்றைய புனித ரோமானியப் பேரரசின் தலைநகரமான ரோமில் கிறிஸ்தவ திருச்சபை வேரூன்றி சிறப்பான வளர்ச்சியை பெற்ற காலத்தில் முதல் நூற்றாண்டில் அந்தியோகியாவிலும், பின் ரோமிலும் பேராயர் ஆக இருந்த தூய.பேதுரு உலகளாவிய திருச்சபைக்கு தலைமை தாங்கினார். அவருக்குப் பின் வந்த ரோம் பேராயர்களான லீனுஸ், கிளீட்டஸ், கிளமெண்ட், இவாரிஸ்டஸ், அலெக்சாண்டர் போன்றோர் பொதுவான ஒன்றுபட்ட திருச்சபையை தலைமைதாங்கி நடத்தினார்கள்.

### தொடக்ககால சபை நிலை

சபை காரியங்களில் பிற பேராயர்கள் ரோம் பேராயரின் ஆலோசனை கேட்டு கடிதம் எழுதுவதும் ரோம் பேராயர்கள் பிற பேராயர்களுக்கு ஆலோசனை தந்து வழி நடத்துவதும் தொடக்ககால திருச்சபையில் நடைமுறையில் இருந்தது. மேலும் பொதுவான திருச்சபையின் தலைவராக ரோம் பேராயர்கள் படிப்படியாக தலைமைத்துவத்தில் உருவெடுத்தார்கள் பிற்காலத்தில் ரோம் பேராயர்கள் போப் (பாப்பரசர்) என அழைக்கப்பட்டனர்.

### திருச்சபை தலைமைத்துவம் உறுதிப்படுத்தப்படல்

ஆறாம் நூற்றாண்டில் போப் ஆக வந்த மகா கிரகரி (கி.பி.540 இல் பிறந்தவர் கி.பி.590 இல் ரோம் பேராயர் ஆனவர்) ரோம் பேராயரே ஒன்றுபட்ட பொதுவான (கத்தோலிக்க) திருச்சபையின் தலைவர் என்பதை உறுதிப்படுத்தினார். அக்காலத்தில் கான்ஸ்டாண்டிநோபிள் தலைமையிடமாகக் கொண்ட கிழக்கு ரோமானியப் பேரரசின் பேரரசர் ஜஸ்டினியன் துறவர மட தலைவர்களை நியமித்தல் பேராயர்களை தேர்வு செய்தல், நியமித்தல், அருட்பொழிவு முறை, வழிபாட்டு முறைமை, ஆயர்களின் நன்னெறி வாழ்க்கைக்கான சட்டதிட்டங்கள், ஆகியவை தொடர்பான புதிய சட்டங்களை உருவாக்கி தலைமை ஆயர் போன்று செயல்பட்டு வந்தார். அந்த சூழலில் தான் மகா கிரகரி போப் ஆனார் .நான்காம் நூற்றாண்டில் தொடங்கிய துறவர குருத்துவம் மகா கிரகரி காலத்தில் பெருகி உறுதி படுத்தப்பட்டது. உத்தரிக்கும் ஸ்தலம் குறித்த போதனையை இவரே உறுதி செய்தார் பாடல் முறைகள், வழிபாட்டு முறைகளில் சீர்திருத்தம் செய்தார், கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக மிஷனரிகளை உலகமெங்கும் அனுப்பப்பினார் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா எங்கும் இருந்த திருச்சபைகள் போப் ஆக இருந்த ரோம் பேராயரின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவரது காலத்தில் ரோம் பேராயரின் (போப்பின்) தலைமையிலான உலகளாவிய திருச்சபையின் ஒன்றுபட்ட தலைமைத்துவம் உறுதிப்படுத்தப்பட்டு 1054 வரை நீடித்தது.

### முதல் தலைமைத்துவப் பிளவு

கி.பி. 1054 இல் கிழக்கு ஐரோப்பிய திருச்சபைகள் அக்கால புனித ரோமானியப் பேரரசின் தலைநகரமான கான்ஸ்டாண்டிநோபிள் நகர (இன்றைய துருக்கியின் இஸ்தான்புல்) பேராயர் தலைமையில் பழமைவாத வைதீக திருச்சபை (Orthodox) என பிளவுபட்ட போது கிரேக்கம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய திருச்சபைகளுக்கு பிதாப்பிதா (Patriarch) என்று அழைக்கப்பட்ட கான்ஸ்டாண்டிநோபிள் பேராயர் மைக்கேல் செருலாரியஸ் தலைமை தாங்கினார் இவ்வாறு திருச்சபைத் தலைமைத்துவம் முதன் முதலாக இரண்டாக பிளவுபட்டது.

### முதல் தலைமைத்துவ பிளவினால் திருச்சபை சந்தித்த சிக்கல்கள்

1. எருசலேம் உட்பட யூதேயா பாலஸ்தீன நாடுகளின் புனித இடங்கள் அனைத்தும் இஸ்லாமியர்களின் ஆளுகைக்குள் சென்றுவிட்டது. சிலுவைப் போர்களுக்கு வழிவகுத்தது. புனித இடங்களுக்கு கிறிஸ்தவர்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது

2. நிசேயா 1071 லும், ஆர்த்தொடாக்ஸ் திருச்சபையின் தலைமை இடமாக இருந்த கான்ஸ்டாண்டிநோபிள் 1453 லும் இஸ்லாமியரால் கைப்பற்றப்பட்டு அதன் தலைமை பேராலயமாக இருந்த சோபியா தேவாலயம் மசூதியாக மாற்றப்பட்டது.

### மீண்டும் தலைமைத்துவத்தில் பிளவு

உலகளாவிய ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு தலைமை இடமாக இருந்த ரோமாபுரி வாடிகனில் தூய. பீட்டர் சதுக்கம் தேவாலயத்தை மிகச் சிறப்பாக கட்டியெழுப்ப ஏராளமான பணம் தேவைப்பட்ட சூழ்நிலையில் சிலரது தவறான வழிகாட்டுதலால் பாவமன்னிப்பு சீட்டு போன்ற திருமறைக்கு புறம்பான காரியங்களை போப்பாண்டவர் அனுமதித்ததால் பதினாராம் நூற்றாண்டில் திருச்சபை சீர் கெட ஆரம்பித்தது கத்தோலிக்க மதகுரு மார்ட்டின் லூதர் தலைமையில் புராட்டஸ்டண்ட் இயக்கம் எழும்பியது (1517). மேற்கு ஐரோப்பாவின் வடபகுதியில் புராட்டஸ்டண்ட் இயக்கம் வலிமை பெற்றது திருச்சபை தலைமைத்துவத்தில் இதன் மூலம் மீண்டும் பிளவு ஏற்பட்டது.

### இரண்டாம் தலைமைத்துவப் பிளவினால் ஏற்பட்ட விளைவுகள்

1. கத்தோலிக்கர்களும் புராட்டஸ்டண்ட்களும், போட்டி போட்டுக்கொண்டு உலகமெங்கும் கிறிஸ்தவ மதத்தை பரப்பினார்கள்

2. இயேசு சங்கம் (Jesuit) என்ற கத்தோலிக்க மிஷனரி இயக்கம் உருவாகி உலகமெங்கும் தமது துறவரமிஷனரிகளை அனுப்பியது

3. ஒன்றுபட்ட மேற்கு ஐரோப்பிய சபையில் வடபகுதியிலிருந்த டியூடரான்கள் இனத்தவர் பிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவத்தை பெருமளவில் ஏற்றனர்.

# நடப்பு செய்திகள்

1.சென்னை சாஸ்திரி நகரில் உள்ள ஒரு தேவாலயத்தில் ஒரு பெண் தன் இரண்டுமாத ஆண்குழந்தையை சர்ச் வாசலில் விட்டுவிட்டு, ஒரு உருக்கமான கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டாள். அதில் என்னால் இக்குழந்தையை வளர்க்கும் அளவு பொருளாதார வசதி, இல்லை ஆகவே இத்தேவாலயத்தின் போதகர் இந்தக் குழந்தையை நல்லமுறையில் வளர்க்கவோ அல்லது குழந்தை இல்லாத ஒருவர்க்கு இக்குழந்தையை கொடுத்து வளர்க்கும்படி எழுதியிருந்தார். இப்படி அநேக அனாதைக் குழந்தைகளை வளர்த்த தேவாலயங்கள் இந்தியாவில் அநேகம், அதில் வளர்ந்து இன்று தேவாலயப் போதகர்களாகவும் இறைத்தொண்டு புரிகிறவர்களாகவும் இந்தியாவில் அநேகர் உண்டு.

2.செங்கல்பட்டு அருகில் உள்ள பாலாறு கரையில் உள்ள கரைத்திட்டு என்னும் மின்சார வசதியில்லாத கிராமத்தில் ரமேஷ் ஜெபராஜ் என்னும் ஒரு ஊனமுற்ற போதகர் நடத்திவந்த சுயாதின கிறிஸ்தவ தேவாலயத்தின் மேற்கூறையையும் அதில் உள்ள பொருட்களையும் யாரோ சிலர் இந்த கொரானா ஊரடங்கு காலத்தில் வழிபாடு நடத்தப்படாத இக்காலத்தில் எரித்துவிட்டனர். காவல்துரையினர் இதை விபத்து என்று பதிவுசெய்து விசாரனை நடத்திவருகிறார்கள். மின்சார வசதி இல்லாத இத்தேவாலயத்தில் விபத்தாக தீ பற்றுவதற்கு வாய்ப்பில்லை என்கிறார் அதன் போதகர். (ஜீன் 15 2020)



3. உக்ரைன் நாட்டை சேர்ந்த முன்னணி தேவாலய தலைவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. உக்ரைன் ஆர்தடாக்ஸ் தேவாலய தலைவர் பாதிரியார் ஃபிலரெட்டுக்கு கோவிட்-19 தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. தன்பாலின திருமணங்களால் ஆத்திரமடைந்ததால், கடவுள் கொடுத்த தண்டனைதான் கொரோனா வைரஸ் என்று இதே ஃபிலரெட் முன்பு கருத்து தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. தற்போது இவருக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும், அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. ஃபிலரெட்டுக்கு தற்போது 91 வயதாகிறது. கடந்த மார்ச் மாதம் உக்ரைன் நாட்டை சேர்ந்த தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில், கொரோனா வைரஸ் கடவுளின் தண்டனை என்று குறிப்பிட்டிருந்தார். அவர்,

"மனிதர்களின் பாவங்களுக்கு கடவுளின் தண்டனைதான் இது. அதில் முதல் பாவம் தன்பாலின திருமணங்கள்"

என்று தெரிவித்திருந்தார். இந்த கருத்து உலகளவில் தன்பாலின உரிமை செயற்பாட்டாளர்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஃபிலரெட்டின் கருத்தை ஆம்னெஸ்டி இண்டர்நேஷனல் நிறுவனமும் கடுமையாக சாடியது. இந்நிலையில், ஃபிலரெட்டுக்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

4. வரப்போகும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஓட்டுப் போடுகிறவர்கள் அவரவருடைய மனசாட்சியின்படி ஓட்டுப்போடவேண்டும் என்று எப்பிஸ்கோப்பல் திருச்சபையின் பேராயர் மைக்கேல் வலியுறுத்தினார். இயேசு இந்த சூழலில் இருந்திருந்தால் என்ன செய்வாரோ அப்படியே செய்யுங்கள், ஓட்டுப் போடுவது ஒரு பரிசுத்த செயல் என்றார். இனப்பாகுபாடற்ற நிலையை ஆதரிக்கவேண்டும், நாம் உலக சட்டங்களுக்கு அல்ல சர்வவல்லவருடைய சட்டத்திற்கு கீழ்படியவேண்டும்: "உன் தேவனாகிய கர்த்தரை, உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், சிந்தையோடும், பெலத்தோடும் அன்புகூர்வாயாக, உன்னை நேசிப்பது போல் பிறரையும் நேசி." ஒவ்வொருவரும் இச்சூழலில் நமது தனிப்பட்ட உறவுகளில், சமூகத்தில் மற்றும் பொது இடங்களில் யார் நமது பிறராக இருக்கிறார்கள் என்பதை நிதாதித்து தீர்மானிக்கவேண்டும், என்கிறார்.



4. தூத்துக்குடி மாவட்டம் சிவகளை மற்றும் ஆதிச்சநல்லூரில் நடைபெற்று வரும் அகழாய்வுப் பணிகளை தமிழக தொல்லியல் துறை ஆணையர் உதயச்சந்திரன் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

5.சிவகளை மற்றும் ஆதிச்சநல்லூரில் தமிழக தொல்லியல் துறை சார்பில் அகழாய்வு பணிகள் கடந்த மே 25-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

6.ஆதிச்சநல்லூர், சிவகளை அகழாய்வு... அருங்காட்சியகம் அமைக்க தொல்லியல் ஆர்வலர்கள் கோரிக்கை!

## அக்டோபர் மாதம் பிறந்த நாள் கொண்டாடும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

John Joseph
Daniel Savarirayan Joseph
John Samuel
Charles Mead
Devasagayam Vedamanikkam Paul
Charles Hubbard
Henry Pope
Pernpettan samuel
Arthur Joseph Godden
Amirthapendi Asirvatham Jesudoss
Christian friedrich Schwartz
Ambrose Vedanayagam Thomas
Arumannayagam Vedakkan
Adinarayanam Vedamanikkam
George Williams (YMCA)
Samuel Masillamani
Perinbam Gnanayutham
Samuel Augustus Godfrey
David Masillamani Parktanathan
Musillamani Dharamanathan
Edward Sargent
W.T.M Clewes
Abaraham Swamidasan
Pitchaimuthu Luke Browne
David Arulanandam
Jesudason ALBERT
William Ward
Arulappan Savarimuthu
Josudusan Devassgayama Samuel
David Daniel Rajamani
Lgnatius of Loyola
Suviseshamuthu daniel
Ashton Dibb
Joseph Gnanaolivu
Arumai Vedanayagam Devadason
H.A Popley
Joss Walter
SR I Kiruby

## அக்டோபர் மாதம் நினைவு நாளை ஆசரிக்கும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

John Jesudasan
Christian Wilhelm Gericke
Gurubadam Yesudian
Henri Prunier E.P
Samuel Stephen Simeon
David Devapiraiam
Asivervatham Gananmuthu
Richard Francis Ardill
Augustus Henry Lash
Thomas Hastings
John Kohlhoff
David Arulappan
Joseph David
Murugan Vedamanikkam
Arthur Abbott Dignum
John Gabb
Jesudason Devavaram Dare
Harwood Raw
Edward Sargent
Bauliah Devairakkam Devapiram
Isaac perinbam Gnanayutham
David Fenn
Ashton Dibb
Henry Martyn
Paramananathan Israel Samuel Baboo
Thomas Gajetan Ragland
Christian Paramasgayam Gnanamani
Devasagayam Koilpillai Gurubatham
Edwin Blackmore
Abraham Gurubadam
Ann Hasseltine Judson
Sister Joyce M Ullard
Devasagayam Suppan Bakkiandian
Gnananmuthu Rajapandiyan Gnanamalai
Henry Crisp
Abraham Vedamanikkam
Swanikalai Paul Manickam
Antony Ramsden Cavalier
Arumanayagam Gnanapragasam
T E Cilettar




புதிய எருசலேம் ஆலயம், தரங்கம்பாடி

கர்த்தர் நன்மையானதைத் தருவார்.

திருநெல்வேலி திருமண்டலம் - நல் ஆலோசனைத் திருப்பணி

# தேவ ஆசீர்வாதத்துடன் உங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுங்கள்!

## www.TDTA ChristianMatrimony.com

**அனைத்து கிறிஸ்தவ சபைப்பிரிவினருக்கும் ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கான வரன்கள்!**

**சிறப்பம்சங்கள்:**

- எளிதான பதிவு முறை மற்றும் வரன் தேடுதல்.
- தெளிவான வரன் விபரங்கள்.
- நாள்தோறும் உங்கள் தேர்விற்கேற்ற புதிய வரன்கள்.
- வரன் வீட்டாரை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.
- உங்கள் தகவல்களுக்கு இடைத்தரகர்கள் தொல்லை இல்லா முழு பாதுகாப்பு.
- உன்னதமான சேவை. கமிஷன் கிடையாது.



**இன்றே வரன் பதிவு செய்யுங்கள்.**

**இயக்குநர், நல் ஆலோசனைத் திருப்பணி,**

நூற்றாண்டு மண்டபம், முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627002.

மேலும் விபரங்களுக்கு: **75 9843 1282** **(0462) 400 1282**

**வேலை நேரம்:** காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

## TDTA கிறிஸ்தவத் திருமணத் தகவல் மையம்

பாளையங்கோட்டை
நூற்றாண்டு மண்டபம், முருகன்குறிச்சி.
(0462) 258 1282

அழகியபாண்டியபுரம்
சங்கரன்கோவில் மெயின்ரோடு, பேருந்து நிலையம் எதிரில்.
75 9843 1282

tdtachristian.matrimony

support@tdtachristianmatrimony.com

Trusted Matrimonial Site since 2008.
Everyday Prayers for Members.
Thousands of Happy Families Already!
ACT NOW.

www.TDTA ChristianMatrimony.com